
www.tamilarangam.net

# தமிழர் நலன் புரிவோர் சிறப்புமலர்

Tamil Action Committee U.K.
11, Keightley Drive
New Eltham, London SE9 2HF
Tel: 081-859 3600

# அகதி
# AKATHY (REFUGEE)

- நலன் புரிவோரும் பெறுவோரும்
- வரவிருக்கும் தஞ்சம் கோருவோர் சட்டமூலங்கள்
- 10 வருட நிறைவு
  –தென் இலண்டன் தமிழர் நலன் நிறை அமைப்பு



30 ஆண்டு தமிழர் நலன் புரி பணியில்
திரு. சின்னப்பு மகரசிங்கம்

காலாண்டிதழ்
Quarterly Magazine
17
**Akathy Publication**
*Portacabin
Knights Lane
Edmonton
London N9 0PD
Tel: 081 887 0644*

ஆகக்கூடிய விலை
20p
கடைகளில் மாத்திரம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# 30% DISCOUNT FOR ALL SERVICE PARTS

* We have a massive range of garrage equipment and tools
* We stock components & Spares for all British, European & Japanese cars

**OPEN 7 DAYS A WEEK**

* We have everything from a clutch to a plug.
* We are one of the largest stockists of body panels

SPEEDY DELIVERY

## VEE KAY AUTOS

**PARTS**
76 Stamford Hill, London N 16
0181 806 2294/5

**SERVICES**
48, Belfast Road , London N16
0181 806 1965

M.O.T
While - You - Wait


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் அகதிகளின் நலன்களில் அக்கறையுடன் பணிபுரியும் அகதி சஞ்சிகையின் தொடர்ச்சியான வெளியீட்டுக்கு எமது ஆதரவுகள்

# RAJA & CO SOLICITORS

## ADMINISTRATORS OF OATHS

*Legal Aid*

**295 Balham High Road, Tooting Bec,**
**London SW17 7BA**
**TEL : 0181 682 2585 FAX : 0181 682 2575**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

With Best Compliments
from

Legal Aid

# RENGAN N. DEVARAJAN

## Solicitors

**IMMIGRATION**
**CRIME/POLICE STATION ADVICE**
**WELFARE BENEFITS/HOUSING/LANDLORD & TENANT**
**MATRIMONIAL**

## LEGAL AID SERVICE

## 0181- 478 5797

**EMERGENCY MOBILE : 0836 546429**

**FIRST FLOOR, 128 ILFORD LANE, ILFORD, ESSEX IG1 2LE**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அகதியின் எண்ணத்தில்.......

## மற்றுமொரு சட்டமூலம் ......புதிய அச்சம்!

போலியான தஞ்சம் கோருபவர்களை (Bogus Asylum Seekers) மேலும் கட்டுப்படுத்த புதிய சட்டமூலங்களை தான் கொண்டு வரப்போவதாக உள்நாட்டு விவகார அலுவல் செயலாளர் திரு மைக்கல் ஹவாட் சென்ற மார்ச் மாதம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். 1993 ஜுலையில் தஞ்சம் கோருவோர் மேன்முறைமீடு சட்டமூலம் கொண்டு வரப்படும்போதும் இதே 'கோஷம்' தான் போடப்பட்டது. முன்மொழியப்பட்டுள்ள புதிய சட்டமூலங்களில் இலங்கைத் தமிழ் அகதிகளை மேலும் வெகுவாக பாதிப்படைய செய்பவைகளில் முக்கியமாக இரண்டைக் குறிப்பிடலாம். ஒன்று "பாதுகாப்பான" நாடுகள் என்ற பட்டியலைத் தயாரித்து அந்த நாட்டினர்க்கு தஞ்சம் வழங்க மறுப்பது. உள்நாட்டு அலுவலகத்தின் தற்போதைய கொள்கைப்படி, இலங்கையில் வடகிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள நிலைமை ஒரு தற்காலிக அமைதியின்மை என்பதும் மற்றைய பகுதிகளில் தமிழர்கள் மட்டுமன்றி எல்லாச் சமூகத்தினரும் பாதுகாப்பாக வாழக்கூடிய சூழ்நிலை உள்ளதாக முடிவுசெய்கின்றது. இதன் பிரகாரம் புதிதாக தயாரிக்கப்படும் பட்டியலில் இலங்கையும் பாதுகாப்பான நாடுகளில் ஒன்றாகச் சேர்க்கப்படலாம். இச்சந்தர்ப்பத்தில் இறங்குதுறைகளில் வரும் இலங்கைத் தமிழரை நாட்டிற்குள் உட்புகாவண்ணம் தடுத்து உடனடியாக திருப்பி அனுப்புவதற்குரிய அதிகாரங்களை இச்சட்டத்தின் மூலம் அதிகாரிகளுக்கு வழங்கப்படலாம்.

தற்போதைய புதிய சட்ட மூலத்தின் பிரகாரம் உள்நாட்டு அலுவலகத்தினால் நிராகரிக்கப்படும் தமிழ் அகதிகளின் விண்ணப்பங்களுக்கு எதிராக மேன்முறைமீடு செய்வதற்கான உரிமையை வழங்கப்படுகின்றது. இம்முறைமீடுகள் எழுத்து மூலமானது மட்டுமன்றி நடுவர்களுக்கு முன் வாய்மூலமான விசாரணைகளுக்கும் தமது சார்பில் வாதாட அனுமதி அளிக்கின்றது. ஆனால் முன்மொழியப்பட்ட புதிய சட்டமூலத்தின் பிரகாரம் வெளிப்படையான ஆதாரங்களை (Manifestly unfounded )கொண்டிராத தஞ்சம்கோரும் விண்ணப்பங்கள் அதிகாரிகள் மட்டத்தில் நிராகரிக்கும் பட்சத்தில் அதற்கு எதிரான எழுத்து மூலமான மேன்முறைமீட்டை செய்ய முடியும். இம்முறைமீடு அதிகாரிகள் மட்டத்திலே பரிசீலனை செய்யப்படும். இதற்கு மேலாக எவ்விதமான நீதிமன்ற விசாரணைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

1993ஆம் ஆண்டு ஜுலைக்குப் பின்பு பரிசீலனைக்கு எடுக்கப்பட்ட இலங்கைத் தமிழர் தஞ்சம் கோரும் விண்ண்பங்களில் 98 வீதமானவை மேல்குறிப்பிடப்பட்ட வெளிப்படையான ஆதாரங்களைக் கொண்டிருக்கவில்லை என நிராகரிக்கப்பட்டு நாடு கடத்தும் உத்தரவுகளை பிறப்பித்த நிலையில் அதற்கு மேலாக மேன்முறைமீடு செய்யப்பட்டு முடிவுகளை எதிர்பார்த்து இருக்கின்றவர்களின் எண்ணிக்கை இப்போது 1250 ஆகும். மேலும் 5 ஆயிரம் பேரின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்குக் காத்திருக்கின்றன. முன்மொழியப்பட்ட சட்ட மூலங்கள் நடைமுறைக்கு வரும் போது தமிழ் அகதிகளின் கோரிக்கைகளின் முடிவுகள் எவ்வாறு அமையுமோ என்ற அச்சம் அகதிக்கு இப்போதே ஏற்படத்தொடங்கியுள்ளது.

'அகதி' அகதி பிரசுரத்தினால் வெளியிடப்படுகின்றது. ஆக்கங்களில் வரும் கருத்துகள் ஆக்கதாரர்களையே சார்ந்தவையாகும். எனினும் ஆக்கங்களை சுருக்கவோ அல்லது திருத்தவோ அகதி பிரசுரக்குழுவுக்கு உரிமை உண்டு. அகதியில் வரும் ஆக்கங்கள் வடிவமைப்புகள் எந்தவகையிலும் பிரதி செய்வது தடைசெய்யப் பட்டுள்ளது.
அகதி லட்சுமி பதிப்பகத்தாரால் வடிவமைக்கப்பட்டு நர்மதா பதிப்பகத்தால் அச்சிடப்பட்டு 1995 ஆனி மாதம் அகதி பிரசுரத்தாரால் வெளியிடப்படுகின்றது.

www.tamilarangam.net



# THE FEAR OF PEACE

- Se.Ka.Anandan-

J.F.Kennedy in his inimitable style said "never negotiate in fear but never fear to negotiate." This was said in the realisation that there were some who were frightened to negotiate. When statesmen or heads of two or more countries negotiate only the interest of the nation is on the minds of those negotiating. This is not true in the case of every negotiator. In some instances when malicious individuals are involved in the negotiations, their self interest takes priority over other considerations. For such individuals the fear is usually a fear of the probable loss of their future income, power and position, although openly they would say that they want peace.

It is noble and magnanimous to shout from the rooftops that there must be peace. It is an over simplification to say that if there is peace we can save a lot of money and spend that money for the welfare of the people - the peace dividend - the hard truth of the matter is different. When one says that we spend a lot of money on war, it must be realised that the money is being spent on salaries, profits and expense accounts of the local citizens. It also means that there are large number of people employed in the factories that manufacture the arms probably in another country receiving part of the money. When there is peace these people will loose out. It is estimated that the end of the cold war has lead to the loss of over three hundred thousand jobs in the U.K. alone. Some of them quickly found other employment, particularly if they are young but others take a longer time. All have to go through a period of stress and agonizing uncertainty. We cannot blame these people if they have a fear of peace.

The fear of peace or the fear of the possibility of losing ones income or position of power is in most cases very overpowering. It over-rides humanitarian considerations. It may even blur a persons common sense, as nobody wants to tell in public that they oppose peace. (the media has already ensured that) but in fact deep inside they do oppose peace and its probable outcome.

Just glance at the figures of the cold war. The nuclear arsenal which the USA has or had was said to be 4000 times the amount required to destroy the whole world. Probably USSR had a similar amount. How and why did this come about? Democracy. elections, votes, employment, company profits, share prices, expense accounts, salaries, mortgage payments and a whole host of other factors have to be included in the equation before we can even think of working out an answer to that question. Anyone can talk about democracy, election, campaigning and votes but to say that one opposes peace... No way! That will be sacrilege.

What is the situation is Sri Lanka?. Who are those who have a mortal fear of peace? The police force? Army, navy and air force? para-military? arms dealers? the brokers? the militants? home-guards? politicians?? May be all of them or may be some of them.

Let us step aside and look at the situation in Sri Lanka. Whenever a state of Emergency was declared the law enforcing officers received enhanced salaries, unlimited travelling and enjoyed enhanced power. When emergency was removed they lost all these privileges. Who would want to loose these perks? So what happened. Actions were taken to "create trouble" and the politicians were "advised" on the basis of the "intelligence" gathered by the forces to declare a state of emergency. This situation has NOT changed, but those concerned have got well and truly used to living with all these additional incomes. It would be very hard for anyone to grasp this nettle. It would take a lot of guts to disturb this hornet's nest. CAN ANYONE DO IT (and may be risk their life)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



The issue is not very simple on the side of the militants either. Those young men and women who are willing to sacrifice their life for a cause - and not working for a salary - must be people with a very deep rooted conviction instilled into them by the leaders. What would be the consequence of pure undiluted peace? The leaders may not be leaders any more. Democracy may demolish them. It would be extremely difficult to replace a gun with a mammoty (hoe) on the shoulders of these youths. They would have to live with reduced or may be a total lack of power - the power that comes with a loaded gun is not easy to replace.

The whole issue has to be handled very carefully, gently. and with lot of care and consideration for all concerned. The ordinary people must be convinced that peace is not only essential for progress but absolutely essential for the future generation to grow up as normal human beings.


People must realise this and put pressure on those handful of people who may oppose peace directly and indirectly for personal profit. These few men and women are very influential and command a powerful lobby.

The people want PEACE - let the politicians take the necessary steps to crush the few selfish individuals who can and are trying to crush the progress towards peace. Let us not forget that peace is NOT the absence of war; that is only the first step. Peace really means the presence of love, affection, compassion and tolerance among all sections of the population.

Once again let me remind the reader another statement by J.F.K.

IF WE DO NOT END WAR,
WAR WILL END US.

VJ Veeraj Jewellers




உங்கள் சகலவிதமான
தங்க நகைகளுக்கும்
நீங்கள் நாடவேண்டிய
ஒரே தங்கநகை
மாளிகை

**57 TURNPIKE LANE**
**LONDON N8 0EE**
**TEL: 0181 340 0500**
**FAX: 0181 341 2005**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**தமிழ் அகதிகள் திருப்பியனுப்பப்பட்டமைக்கு எதிராக "தமிழ் அகதி அமைப்புக்கள்" நடவடிக்கை என்ன?**

> **இலங்கையில் 12 வருடகால போர் முடிவுற்றது தமிழர் நாடு திரும்ப வேண்டும்.**
> –பெப்ரவரி 95 இல் பிரிட்டன் உள்நாட்டு அலுவலகம்

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பாக உள்நாட்டு அலுவலகம் காட்டிவரும் கடினபோக்கு இப்போது அதிகரித்துள்ளது. இலங்கைத் தமிழர்கள் இந்நாட்டிற்குள் தஞ்சம் கோரி வருவதற்கு இனிமேல் ஏற்கக்கூடிய காரணம் எதையும் கூறமுடியாது என்ற பாணியில் கடிதங்களில் உள்நாட்டு அலுவலகம் தெரிவிக்கின்றது.

பெப்ரவரி 95 நடுப்பகுதியில் உள்நாட்டு அலுவலகத்தினால் தமிழ் அகதியொருவருக்கு எழுதப்பட்ட கடிதமொன்று "அகதிக்கு" கிடைத்தது. அதன் சுருக்கமான தமிழ் ஆக்கத்தை முதலில் இங்கு தருகின்றோம்.

அண்மைக்காலமாக இலங்கையில் ஏற்பட்டு வந்த அமைதியின்மை இப்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுத்துள்ளார்கள். இந்நடவடிக்கைகளில் இலங்கையின் சகல இன மக்களின் சிவில் அரசியல் மனித உரிமைகள் போன்றவற்றை பாதுகாப்பதாகும். சட்டத்தையும் ஒழுங்கையும் மதிக்கின்ற எந்தவொரு இலங்கைப் பிரஜையும் தமிழராக இருந்தாலும் அல்லது வேறு இனத்தவரானாலும் எல்லோரையும் பாதுகாக்கும் ஒரு ஆளுமையுள்ள ஒரு அரசாக இப்போது உள்ள அரசாங்கம் நடைமுறையில் காட்டியுள்ளது. இதனால் இலங்கையைச் சேர்ந்த எந்தவொரு இனமும் தாங்கள் துன்புறுத்தப்பட்ட இனம் என கவனத்தில் எடுக்கப்பட்டு 1951 ஐக்கிய நாடுகள் அகதிகள் சாசனத்தின் கோட்பாடு களுக்கு இணங்க அகதி அந்தஸ்து வழங்குவதற்கு எந்தவிதமான ஆதாரங்களும் இல்லை.

கடந்த சில வருடங்களாக கொழும்பு நகரப்பகுதியில் தமிழர்கள் கைதுசெய்யப்படுவதையும் துன்புறுத்தப்படுவதையும் நாம் அறிவோம். இது பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக அரசு எடுக்கின்ற நடவடிக்கைகள் என்பதையும் ஒழுங்கையும் சட்டத்தையும் நிலைநாட்டும் எந்தவொரு அரசும் இப்படியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அவசியமாகும்.

1988–90 ஆகிய ஆண்டுக்காலப்பகுதிகளில் இலங்கையின் பாதுகாப்புப் படைகளினால் கைக்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் சர்வதேச சமூகத்தின் கண்டனங்களினாலும் கரிசனைகளினாலும் அவைகளை நிறுத்துவதற்கும் அப்போதைய அரசு அதிக கவனத்தையும் அக்கறையையும் எடுத்துக்கொண்டது என்பது இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டிய ஒன்றாகும். ரெட்குறோஸ் சர்வதேச கமிட்டி, காணாமல் போனவர்களுக்கான ஐக்கிய நாடுகள் செயற்பாட்டுக்குழு, சர்வதேச மன்னிப்புச்சபை என்பன இலங்கைக்குள் விஜயம் செய்வதற்கும் தனது நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் முன்னைய அரசு தனது அனுமதியையும் ஒத்து ழைப்பையும் வழங்கியிருந்தது. இதன் அடிப்படையில் இலங்கைப் பாதுகாப்பு படையினருக்கு மனிதஉரிமைகள் பாதுகாப்பு , ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன போன்ற புதிய கோட்பாடுகளை வகுக்க உதவியுள்ளது. ஐக்கிய நாடுகளின் அகதிளுக்கான கமிசன் (UNHCR) 1987 ம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்யும்படி அழைக் கப்பட்டு இருந்தார்கள். இந்தியாவில் இருந்து திருப்பியனுப்பும் தமிழ் அகதிகளின் மீளக்குடியமர்வுக்கும் அவர்களின் பராமரிப்புக்கும் UNHCR பெரும் பங்களிப்பை செய்ய அரசு உதவியிருந்தது. முன்னைய அரசாங்கம் தனது பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் மீறல் சம்பவங்களை பகிரங்கமாக ஒப்புக்கொண்டதுடன் இவை பற்றி விசாரணைகள் நடத்தவும் ஒத்துக்கொண்டது. அத்துடன் மனித உரிமைகள் மீறல் சம்பந்தமாக கரிசனை கொண்ட சர்வதேச தாபனங்களின் தலையீடுகளை அரசு ஏற்றுக்கொண்டது. இவர்களின் சிபார்சுகளின் அடிப்படையில் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு தனது படையினருக்கு மனித உரிமைகள் பற்றியும் அதனை மதிப்பது பற்றியும் தெளிவான கட்டளைகளைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிறப்பித்தது. இலங்கை அரசின் படையினால் வடகிழக்கு மாகாணங்களில் மேற்கொண்ட ராணுவ நடவடிக்கையில் சாதாரண மக்கள் பாதிக்கப்பட்டதும் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. இவை முக்கியமாக வடகிழக்கு மாகாணங்களில் இடம்பெற்றாலும் 1994ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி நடைபெற்ற மாகாணத் தேர்தல்கள் அதைத் தொடர்ந்து ஆகஸ்டு 94 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தல் என்பன – இலங்கையில் கடந்த 12 வருடமாக இடம்பெற்றுவந்த சிவில் யுத்தம் முடிவுக்கு வந்துள்ளதாக அறியக் கூடியதாயுள்ளது. இதைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தி யுத்தநிறுத்தம் ஒன்றையும் செய்துள்ளது. தற்போது பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன. இப்போது கொழும்பு நகரத்தின் பொதுவான சமூக நிலைமைகள் எதிர்பார்த்தமைக்கு மேலாக அபிவிருத்தியடைந்துள்ளது. இதனால் சிவில் யுத்தமும் பொதுவான அமைதியின்மையும் மோசமான பொருளாதார நிலைமையும் இவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்குவதற்கு காரணமாக உள்ளது என்று முடிவுக்கு வர முடியாது.

கொழும்பு மாநகரத்தின் சுமார் மூன்று லட்சம் தமிழர்கள் பெரும்பான்மை சிங்கள இன மக்களின் வெறுப்புக்கள் கெடுபிடிகள் எதுவும் இன்றி அன்னியோன்னியமாக வாழ்கின்றார்கள். 1983ஆம் ஆண்டின் பின்பு பல முஸ்லீம் மக்கள். சிங்களவர்கள் விடுதலைப் புலிகளினால் கொடூரக்கொலை செய்யப்பட்டதாக இருந்தாலும் அதற்கு எதிராக இனச் சண்டைகள் எதுவும் ஏற்படவில்லை. 1993 மே மாதம் இடம் பெற்ற ஜனாதிபதி பிரேமதாஸாவின் கொலைக்குப் பின்பும் நிலைமை அமைதியாகத் தான் இருந்தது. நீண்ட காலமாக வர்த்தகத் துறையில் ஈடுபட்டு வரும் தமிழ் வர்த்தக சமூகத்திற்கு எந்த வித பாகுபாடும் காட்டப்படவில்லை. தமிழர்களின் நாளாந்த கடமையில் பாகுபாடு காட்டப்பட்டது என்பதும் தெற்குப் பகுதியில் தமிழர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதும் ஏற்றுக்கொள்ளக்கூடியது ஒன்றல்ல.

1989ஆம் ஆண்டுக்குப் பின்பு இலங்கையின் நிலைமை சீரடைந்து இப்போது வழக்கமான நிலைமைக்குத் திரும்பியுள்ளது. திருப்பி அனுப்பப்பட்ட நிராகரிக்கப்பட்ட தமிழ் அகதிகள் இலங்கையில் எவ்வித பிரச்சனைகளுக்கு –அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு இலக்கானார்கள் என்பதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை. மாறாகஅவர்கள் நாளாந்த சமூக வாழ்க்கை நடத்துவதற்கு உற்சாகப்படுத்தப்படுகின்றார்கள்.

## பல தமிழ் அகதிகள் திருப்பியனுப்பப்பட்டார்கள்.

மேற்கூறப்பட்ட கடிதத்தில் உள்நாட்டு அலுவலகத்தினால் கைக்கொள்ளப்படுகின்ற கொள்கை தெட்டத் தெளிவாக கூறப்பட்டுள்ளது. ஒரு தனிப்பட்ட அகதியின் சூழ்நிலையைவிட இலங்கையின் பொதுவான நிலைமையைத் தான் இந்தக் கடிதத்தில் வெகுவாக விளக்கப்பட்டுள்ளது. இது தமிழ் அகதிகளின் விண்ணப்பங்களை நிராகரிக்க உள்நாட்டு குடிவரவு அலுவலக அதிகாரிகள் பாவிக்கும் "அளவுகோல்" இதன் அடிப்படையினால் தான் பல தமிழர்கள் கட்டாயமாக கொழும்புக்குத் திருப்பியனுப்பப்பட்டார்கள். எத்தனைபேர் திருப்பியனுப்பப்பட்டார்கள் என்பதற்கு நம்பத்தகுந்த எண்ணிக்கை கிடையாது. இருந்தாலும் ஒவ்வொரு தமிழ் அகதியும் கொழும்புக்கு ஏற்றப்பட்ட பின்பு தான் ,தெரிந்துகொள்கின்ற அல்லது தெரிந்து கொள்ள முயற்சிக்கின்ற நிலைமைதான் இங்கு தமிழ் அகதிகளுக்காக கடமையாற்றும் பல அமைப்புக்களுக்கு ஏற்பட்டுள்ள துர்ப்பாக்கிய நிலைமையாகும். அது மாத்திரமின்றி அனுப்பப்பட்ட தமிழரின் சூழ்நிலையை தன்னுடையதில் இருந்து வேறுபட்டது என்ற திருப்தியில் தான் மட்டும் தப்பிவிட்டேன் என்ற சுயநலக்கொள்கை வாதம் பெரும்பாலான தமிழர்களின் ஏனோ தானோப் போக்கும் உள்நாட்டு அலுவலகம் தனது திட்டத்தை இலகுவாக செயற்படுத்த ஏதுவாக விருக்கின்றது. *1993–1994* ஒருவருட காலத்தில் கொழும்புக்கு திருப்பியனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை பற்றி உள்நாட்டு அலுவலகம் வேறுபடுத்திக் கூறமுடியாவிட்டாலும் சுமார் 57 பேர் வரை இந்நாட்டில் இருந்து கட்டாயமாக திருப்பி அனுப்பப்பட்டார்கள் என்று கூறியது . இந்த எண்ணிக்கையில் மூன்றாம் நாட்டில் அகதி விண்ணப்பித்தவர்கள் என்ற அடிப்படையில் இரண்டாவது நாட்டிற்கு திருப்பி அனுப்பட்டவர்களும் அடங்குவார். தனிப்பட்டவர்களின் விண்ணப்பங்களின் அடிப்படையிலேயே அவர்களின் தஞ்சக்கோரிக்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பரிசீலனை செய்து முடிவெடுக்கப்படும் எனக் கூறும் உள்நாட்டு அதிகாரிகள் இப்போது பொதுவான நாட்டின் நிலைமையையும் கவனத்தில் கொண்டு விண்ணப் பங்களை நிரராகரிக்கின்றார்கள் என்பதற்கு மேலே கூறப்பட்ட இந்தக் கடிதம் போதுமானது.

## அதிக அளவிலான திருப்பியனுப்புதல் –நீதிமன்ற விசாரணைகளினால் தடைப்பட்டுள்ளது.

கடந்த ஒரு ஆண்டில் சுமார் 955 தமிழர்களின் அகதி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. ஆனால் ஒரு சிலரே திருப்பியனுப்பப்பட்டார்கள். மற்றையோரின் விண்ணப்பங்கள் யாவும் சில சட்டத்தரணிகளினால் கொண்டு வரப்பட்ட பல்வேறு தமிழர்களின் வழக்குகளின் முடிவுகளிலேயே தங்கியிருந்தன. கடந்த சில மாதங்களில் இவ்வாறான பல வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டு உள்நாட்டு அலுவலகத்தின் தீர்மானங்களுக்கு எதிராக நடுவர்களின் தீர்ப்பு வழங்கப்பட்ட சம்பவங்களை நாம் அறிவோம். ஆனாலும் பிரிட்டன் அரசு நீதிமன்றத் தீர்ப்புக்களுக்கு மேலாக பாராளுமன்ற மூலம் புதிய சட்டங்களைக் கொண்டுவரலாம். சில சந்தர்ப்பங்களில் சுதந்திரமான நடுவரின் சிபாரிசுகளையோ பரிந்துரை களையோ உதாசீனப்படுத்தும் சம்பவங்கள் இங்கு இடம்பெறுவது சகஜமாகிவிட்டது. இதற்கு உதாரணமாக சட்டத்தரணி திரு எம் சிறிதரன் அவர்களினால் நெறிப்படுத்தப்பட்ட வழக்கொன்று இங்கு குறிப்பிடக்கூடியதொன்றாகும். 1994ஆம் ஆண்டு கடைசிப்பகுதியில் தஞ்சம்கோரி விண்ணப்பம் செய்திருந்த தமிழ் அகதியின் கோரிக்கை உள்நாட்டு அலுவல கத்தினால் நிராகரிக்கப்பட்டது. இம்முடிவு மறுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது விசேட நடுவரினால் இவ்விண்ணப்பதாரர்க்கு குடிவரவு விதிகளுக்கு புறம்பான வகையில் குறைந்தது ஒருவருடமாவது இருப்பிட அனுமதியை வழங்கவேண்டுமென சிபார்சு செய்யப்பட்டது. அத்துடன் ஒருவருடம் முடிவுற்றதும் அப்போதுள்ள இலங்கையின் நிலைமையை கவனத்தில் கொண்டு மேலதிக இருப்பிட அனுமதியை வழங்கலாம் எனவும் அந்த விசேட நடுவர் தெரிவித்திருந்தார். இந்த சிபார்சுகளின் அடிப்படையில் உள்நாட்டு அலுவலகத்திற்கு அகதியின் சார்பில் சட்டத்தரணியினால் மறுவிண்ணப்பம் செய்யப்பட்டது. 1995 மார்ச் மாதம் உள்நாட்டு அலுவலகம் இது சம்பந்தமாக சட்டத்தரணி திரு எம் சிறிதரன் அவர்களுக்கு கடிதமொன்றை அனுப்பியது. இதில் விசேட நடுவரின் சிபார்சுகளை தாம் ஏற்க மறுப்பதாக தெளிவாக கூறப்பட்டு அந்த தமிழ் அகதிக்கு அனுமதி வழங்க மறுத்தது. இச்சம்பவம் உள்நாட்டு அலுவலகத்தின் விடாப்பிடித்தனத்தைக் வெளிக்காட்டுகின்றது.

## புதிய சட்டப்பிரமாணங்கள் பற்றி அரசு.

உள்நாட்டு குடிவரவு அதிகாரிகளின் தீர்மானங்களை இந்நாட்டின் சட்டத்தின் பாதுகாப்புடன் நீதிமன்றங்களில் வாதாடி நியாயங்களைப் பெறும்போதும் அவை அரசுக்கெதிரானவையாக இருக்கும் பட்சத்தில் காலத்துக்குக் காலம் புதிய சட்டங்களையும் நிர்வாக மாற்று முறைகளையும் அரசினால் அறிமுகப்படுத்தப்ப டுவது எமக்குள்ள கடந்த கால அனுபவங்களாகும். . 1993ஆம் ஆண்டு ஜுலை கொண்டுவரப்பட்ட சட்டமூலங்கள் மூலம் ஆயிரக்கணக்கில் இந்நாட்டிற்குள் தஞ்சம் என்ற பெயரில் இலகுவாக வருவதை தடை செய்யவும் அடைக்கலம் வேண்டிவரும் உண்மையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு வழங்கவும் என அரசினால் கூறப்பட்டது. எனினும் தற்போது நடைமுறையில் அவ்வாறு இல்லை. கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக இலங்கையில் ஆட்சி செய்த ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்கம் அதன் சகல இனப்பிரஜைகளுக்கும் பாதுகாப்பளிக்கவில்லை என்ற ஒரு பொதுவான கொள்கை அடிப்படையில் இந்நாட்டில் தஞ்சம் கோரும் சகலருக்கும் மனிதாபிமான அடிப்படையில் இருப்பிட அனுமதியை வழங்கியது. 1993 ஜுலை மாதம் புதிய சட்டம் கொண்டு வரும் போதும் இலங்கையின் ஆட்சியில் பாதுகாப்பு நிலைமையில் எவ்வித மாற்றமும் இல்லை என சர்வதேச உதவி வழங்கும் தாபனங்களின் அத்தாட்சிகளுடன் அறிக்கைகள் வெளியிடப்பட்டன. ஆனால் உள்நாட்டு அதிகாரிகளோ 1993 ஏப்பிரல் மாதத்தில் இருந்தே தமிழர்கள் இலங்கைக்கு திரும்பலாம் என்ற கொள் கையைக் கடைப்பிடிக்க தொடங்கினார்கள். இவற்றுக்கு எதிராக இந்நாட்டின் சட்டத்தின் மூலம் நியாயமான பாதுகாப்பை சாதாரண தஞ்சம் கோரும் ஒருவர் தேடிக்கொள்ளலாம் என்ற முன் எச்சரிக்கையுடன்தான் 1993 ஜுலை யில் புதிய சட்டத்தின் மூலம் தனது நடவடிக்கைகளுக்கு உத்தரவாதத்தையும் தேடிக் கொண்டார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கடந்த மார்ச் மாதம் உள்நாட்டு அலுவல்செயலாளர் திரு மைக்கல் ஹவாட் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இந்த வருடம் முடிவதற்குள் கொண்டுவரவிருக்கும் புதிய சட்டமூலங்கள் பற்றி குறிப்பிட்டுள்ளார். குடிவரவு இலாக்காவுக்கு அமைச்சராகவிருந்த திரு சால்ஸ் வேடல் ,சட்டவிரோதமாக குடியேறும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த ஆளும் கட்சி எவ்வித உருப்படியான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்ற ஒரு காரணத்தையும் தனது பதவி ராஜினாமாவுக்கு சாதகமாக தெரிவித்திருந்தார். . கொன்சேவேட்டிவ் கட்சியிலுள்ள வெளிநாட்டவர்களுக்கு எதிரான தமது சகாக்களை திருப்திப்படுத்த திரு மைக்கேல் ஹவாட் புதிய சட்டங்களை கொண்டுவர உந்தப்படுத்தப்பட்டுள்ளார் என பலரினாலும் கூறப்படுகின்றது. புதிதாக வரவிருக்கும் சட்டங்களில் தமிழ் அகதிகளை கட்டாயமாக திருப்பியனுப்ப பாவிக்கக்கூடியவை பின்வருவனவாகும்.

**தமது நாட்டில் அமைதியின்மை, பாதுகாப்பின்மை, என்ற காரணத்தைக் காட்டி பிரிட்டனுக்குள் வரும் அகதிகளின் நாடுகளில் நிலைமை சாதாரண நிலையடைந்தவுடன் தொடர்ந்து தஞ்சம் கோருவதற்கு அருகதையல்லாத நாடு என்ற பட்டியலை காலத்திற்கு காலம் தயாரித்தல். இதனால் பொதுவான விசேட அனுமதி வழங்குவதோ அல்லது தற்காலிக அனுமதி வழங்குவதையோ இல்லாமல் செய்வது. இந்தப் பட்டியலில் இலங்கையும் சேர்க் கப்படலாம்.**

**அகதி அந்தஸ்து பெறுவதற்கு அடிப்படைக் காரணங்களை கொண்டிராத எந்த விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும் பட்சத்தில் அவைக்கு எதிராக மறுப ரிசீலனை எழுத்து மூலம் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். இது நடுவர்களின் முன் விசாரணை செய்யும் முறையை இல்லாமல் செய்வதற்காகும். இந்த சட்டத்தினால் ஏராளமான தமிழர்களின் நிராகரிக்கப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யும் சந்தர்ப்பங்களை இழந்துவிடும்.**

**திருப்பியனுப்புதல் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.**

இலங்கையின் யுத்த நிலைமை சீரடைந்துவிட்டது என்ற நம்பிக்கையை உள்நாட்டு அலுவலகம் எடுத்த போது கொள்கை ரீதியாக அது வெளிப்படையாக தெரிவிக்காவிட்டாலும் நிராகரிக்கப்பட்ட தமிழ் அகதிகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களில் அவை வெளியிடப்பட்டு இருந்தது. திருப்பியனுப்பப்பட்டவர்களின் தகவல்களின்படி அவர்கள் வடகீழ் மாகாணங்களை பிறப்பிடமாகக் கொண்டவர்கள். கொழும்பு பாதுகாப்பான இடமென்ற பேச்சுக்கும் அவர்கள் திரும்பி போக வேண்டிய இடத்தின் பாதுகாப்பிற்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை. உள்நாட்டு அலுவலகம் கட்டாயப்படுத்தி அனுப்பிய முதலாவது நபர் பற்றிய செய்தி வந்ததும் நலன்புரிவோர் சிறிது விழிப்படைந்திருக்க வேண்டும். அதற்கு எதிராக தனிப்பட்ட முறையிலோ அல்லது கூட்டான முறையிலோ எதிர்ப்புக்களை, கண்டனங்களை தெரிவித்திருக்க வேண்டும். இந்த விடயத்தில் நலன் புரிவோர் ஒட்டு மொத்தமாக தவறிவிட்டனர் என்று தான் சொல்ல வேண்டும். அண்மையில் பொஸ்னியன் நாட்டு அகதிகள் திருப்பி அனுப்பவேண்டும் என்று அரசு முடிவெடுத்த போது அந்நாட்டினத்தவர்களுக்கு நலன்புரிவோரின் எதிர்ப்பினால் அந் த முடிவு தடைப்பட்டது. இப்போது பொஸ்னியாவில் மீளத்தொடங்கியிருக்கும் யுத்தம் அவர்களின் எதிர்ப்பை நியாயப்படுத்தியுள்ளது. இது போன்று இலங்கையில் இப்போது எழுந்துள்ள நிலைமை எமது எதிர்ப்பையும் நியாயப்படுத்தியிருக்கும்.

கடந்த வருடம் கடைசிப்பகுதியில் ஒரு தமிழ் அகதி கட்டாயமாக திருப்பியனுப்பப்பட்ட போது அவர் இலங்கையை சேர்ந்தவர் இல்லையென்றும் திருப்பிய னுப்பப்பட்டது சரியெனவும் பல நலன்புரிவோரும் தனியாரும் நியாயப்படுத்திக் கொண்டனர். வாதத்திற்காக இதை ஏற்றுக்கொண்டாலும், இரண்டாவது மூன்றாவது தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டபோதும் தங்களைத் திருப்திப்படுத்தக் கூடிய நியாயங்களுடன் சும்மா இருந்துவிட்டது தான் நியாயமற்றது எனத் தோன்றுகின்றது. அனுப்பப்பட்ட தமிழ் அகதிகளில் கல்வி கற்ற மாணவர் ஒருவர் திருப்பி அனுப்பப்பட்டது தான்.. மிகவும் வேதனைக்குரியதொன்றாகும். திருப்பியனுப்பும் கட்டளைகளை அமுல் நடத்த முடியாதவாறு பல கோணங்களில் வெவ்வேறு சட்டத்தரணிகள் நீதிமன்றங்களின் ஊடாக தடைகளைச் செய்திருக்கின்றார்கள். முன்பு குறிப்பிட்டபடி பல வழக்குகளின் முடிவுகள் மற்றைய ஒன்றின் முடிவுகளை நோக்கி எதிர்பார்த்திருக்கின்றன நீதிமன்றுகளில் கூட தங்கள் மனுக்கள் தூக்கி எறியப்படலாம் என்ற முன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எச்சரிக்கை பீதியுடன் பலர் தாங்களாகவே இலங்கைக்கு திரும்பிவிட்டார்கள். இவர்கள் இங்கு நலன்புரி வோருடனோ அல்லது அமைப்புக்களுடனோ எந்த வித அபிப்பிராயத்தையோ அல்லது ஆலோசனையோ பெறவில்லை. இவர்களின் இச்செயல் உள்நாட்டு அலுவலகத்தின்' கொழும்பு பாதுகாப்பு ' என்ற கொள்கைக்கு உரம் இடுவதாக இருக்கின்றது.

## நலன் புரியும் அமைப்புக்களின் கடமை கைமாறிவிட்டது.

தமிழ் அகதிகளுக்கான தங்கள் சேவையை செய்யவேண்டிய சில அமைப்புக்கள் தங்கள் கடமை களை, பொறுப்புக்களை தனிப்பட்டவர்களிடம் கைமாற்றிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டு பரவலாக இப்போது அகதிகளிடையே பேசப்பட்டு வருகின்றது. தங்கள் விடயங்களை அவசியமான அணுகுமுறையுடன் கையாளப்படுவதில்லை என்பதுவும் தங்களினால் செய்யக்கூடியவற்றைக் கூட பல காரணங்கள் சொல்லி சட்டத்தரணிகளின் கைகளுக்கு மாற்றிவிடுவதற்கு ஆலோசனை சொல்கின்றார்கள் என்ற பரவலான குற்றச்சாட்டுக்களில் உண்மை இல்லை என்று கூறமுடியாது. உள்நாட்டு அலுவலக குடிவரவு அதிகாரிகளின் நடவடிக்கைகளுக்கு சட்டத்தின் மூலம் நியாயம் தேடப்படவேண்டுமென்ற நிலைமைக்கு நாம் தள்ளப்பட்டு இருப்பதால் சட்டத்தரணிகளின் சேவையை சம்பந்தப்பட்டவர்கள் உரிய சந்தர்ப்பத்திலேயே பெற்றுக்கொள்வது நிலைமையை மோசமடையச் செய்யாது என்ற காரணம் நலன்புரியும் அமைப்புக்களின் சார்பில் தெரிவிக்கப்படுகின்றது. 1993ஆம் ஆண்டுக்கு முன் உள்ள காலங்களில் தமிழ் அகதிகளுக்கு தனிப்பட்டவர் தகுதி என்ற அடிப்படையில்லாது பொதுவான கொள்கை அடிப்படையில் விசேட அனுமதி வழங்கப்பட்டு வந்தது. இப்போது நிலைமை அப்படியில்லை. தனிப்பட்டவர்களின் தகுதிக்கு இணங்க அவர்களது தஞ்சக்கோரிக்கை பரிசீலனை செய்யப்படுகின்றது. இப்போது அவர்களது விண்ணப்பம் மிகவும் நுணுக்கமாக பல்வேறு தரவுகள், ஆதாரங்களை வைத்து சமர்ப்பிக்கப்படவேண்டும். சட்டத்தின் நுணுக்கங்கள் ஒருபுறமிருக்க, இலங்கையின் பொதுவான நிலைமையைப் பற்றி அண்மைக்கால ஆய்வுகள் தரவுகள் என்பவற்றை சேகரிக்கக்கூடிய வசதிகளை அமைப்புக்கள் கொண்டிருப்பதினால் அதன் பிரதிநிதிகள் தான் சட்டத்தரணிகளை விட திறமையாக விண்ணப்பங்களை தயாரிக்கக்கூடியவர்கள் என்ற கருத்தையும் பல தமிழ் அகதிகள் முன் வைக்கின்றார்கள். இந்த இரண்டு பக்க கருத்துக்களையும் நோக்கும்போது அமைப்புக்கள்– சட்டத்தரணிகள் இரண்டுபகுதியுமே ஒருங்கிணைந்து தமிழ் அகதிகளின் விடயத்தில் ஒன்றுபட்ட செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும் என்பதும் ஏற்கனவே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ் அகதிகள் நடவடிக்கைக்குழு (TRAG) இணைப்பாளர் திரு வரதக்குமார் அவர்கள் குடிவரவு விடயங்களில் பிரபல்யம் வாய்ந்த சட்டத்தரணிகளுடன் இணைந்து தமிழ் அகதிகளை நாடு கடத்தலுக்கு எதிரான வாதத்திற்கு ஆதாரமாக பெருந்தொகையான ஆவணங்களை தயாரித்திருக்கின்றார்கள். சில முக்கிய நீதி மன்ற விசாரணைகளின் போதும் இவர் நேரடியாக சாட்சியங்களை அளித்தமை ஒன்றுபட்ட நடவடிக்கைகளுக்கு ஒரு உதாரணமாகும். இவர்களினால் தயாரிக்கப்பட்ட பல நூறு பக்கங்கள் கொண்ட ஆவணங்கள் ஏராளமான சட்டத்தரணியினால் பிரயோசனப்படுத்தப்படுகின்றது. தமிழ் அகதிகள் நலன்புரியும் அமைப்புக்கள் பற்றி பிரஸ்தாபிக்கும் போது லண்டனில் பேரளவில் பல அமைப்புக்கள் இருந்தாலும் தேவையான சேவையை வழங்கக்கூடிய வசதியையும் ஆட்பலத்தையும் கொண்டிருப்பது 'ஒரு சிலவையே. இதனால் மூலை முடுக்கெல்லாம் பெயர்ப்பலகையில் இயங்கும் அமைப்புக்கள் எல்லாவற்றையும் ஒரு வட்டத்திற்குள் கொண்டு வந்து அதன் சேவைகளைப் பற்றி பொதுவாக அளவிடமுடியாது.

## நலன் புரிவோரின் ஒருங்கிணைந்த நடவடிக்கை

இன்றைய இலங்கைச் சம்பவங்கள் எப்படியாக இருந்தாலும் உள்நாட்டு அலுவலகத்தைப் பொறுத்தவரை தமது கொள்கையில் எவ்வித மாற்றத்தையும் கொண்டிருப்பதற்கான எவ்வித அறிகுறியையும் காணவில்லை. இதற்கும் மேலாக வரும் நவம்பர் மாதம் கொண்டுவரப்படவிருக்கும் புதிய சட்டமூலங்கள் உள்நாட்டு அலுவலகத்தின் கடினபோக்கை மேலும் அதிகரிக்கும். இந்த எதிர்பார்ப்புக்களை முன்வைத்து நலன்புரிவோரும் நலன்பெறுவோரும் ஒன்று சேர்ந்து ஒருங்கிணைந்த நடவடிக்கைகளில் இறங்குவது அவசியமாகும். கடந்த மாதங்களில் தெற்கு லண்டன் தமிழர் நலன்புரி அமைப்பு (SLTWG) பல முன் எடுப்புக்களை எடுத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. பல தொடர்ச்சியான ஆலோசனைக்கூட்டங்களையும் கருத்தரங்குகளையும் நடாத்தி தமிழ் அகதிகளுக்கு இன்றைய நிலைமை பற்றிய விபரங்களை தெரியப்படுத்தி விழிப்படையச் செய்திருந்தார்கள். தங்களது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் உள்ளூராட்சி அங்கத்தவர்களுக்கும் இலங்கையின் தற்போதைய நிலைமை பற்றி தனிப்பட்ட முறையிலும் கடிதங்கள் மூலமும் விபரங்களைத் தெரிவித்து இலங்கைத் தமிழரைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளுக்கு எதிராக தங்கள் ஆதரவுகளை கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். எது எவ்வாறாயினும் எந்த ஒரு நடவடிக்கையும் நலன்புரிவோரும் நலன 'பெறுவோரும் ஒன்று சேர்ந்து கூட்டான இறங்கும்போது எமது நியாயமான கோரிக்கைகளுக்கு நிட்சயம் நியாயம் கிடைக்குமென எதிர்பார்க்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# M.K.SRI & CO

## SOLICITORS
## &
## ADMINISTRATORS OF OATHS

93 Walton Avenue, South Harrow, Middx, HA2 8QY

**TEL : 0181 423 2141**
**FAX/TEL : 0181 248 3383**

## WE SPECIALISE IN

** Immigration*
** Crime*
** Conveyancing*
** Residential & Commercial*
** Police Station Advice & Assistance*
** Accident Claims * Matrimonial matters*
** Welfare benefits & Social security matters*

Legal Aid

**LEGAL AID WORK UNDERTAKEN**

*PARTNERS*

**N.KRISHNARAJAH**
**M.K.SRITHARAN**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ANTON WARAN & CO

## SOLICITORS AND COMMISSIONERS FOR OATHS

WE UNDERTAKE

** Civil Litigation*
** Commercial Litigation*
** Immigration * Personal Injuries*
** Conveyancing * Entertainment Law*
** Residential & Commercial*
** Police Station Advice & Assistance*
** Accident Claims * Matrimonial matters*
** Welfare benefits & Social security matters*

## FOR ADVICE & ASSISTANCE ON ALL IMMIGRATION MATTERS

PARTNERS

Legal Aid

K.A.R Bulathwela LLB
S.K . Nageswaran LLB

Legal Aid

**551 High Road**
**Tottenham**
**London N17 6SB**
**Tel : 0181 808 2397**
**Fax : 0181 801 8818**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 30 வருடகால சேவையில் திரு சின்னப்பு மகரசிங்கம்




ஐக்கிய ராட்சியத்தில் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக தமிழர்களின் நலன்களுக்காக சேவை செய்வதற்காகவே தனி மனித அமைப்பாக தன்னை ஈடுபடுத்திக்கொண்ட திரு சின்னப்பு மகரசிங்கம் அவர்களை கௌரவித்து அவருடைய சந்திப்பொன்றை இந்த சிறப்பு மலரில் வெளியிட வேண்டுமென்ற நோக்குடன் அவரை நெருங்கினோம். தனது 70ஆவது வயதிலும் சுகவீனமுற்ற தேக நிலைமையிலும் பலத்த சிரமத்தின் மத்தியில் எம்முடன் தனது அனுபவங்களை பகிர்ந்துகொள்ள ஒப்புக் கொண்டார். ஏற்கனவே ஏற்பாடு செய்த ஒழுங்கின் பிரகாரம் தென்கிழக்கு லண்டனில் நியூ எல்த்தம் என்னுமிடத்தில் ஒரு ஒதுக்குப்புறம்பான அமைதியான நகர வாடையற்ற சுகமான காற்றோட்டத்தின் மத்தியில் அமைந்துள்ள அவரது இல்லத்திற்குச் சென்றோம். அவரது துணைவியார் இன்முகம் கொடுத்து முதலில் என்மை வரவேற்றார்கள். வீட்டின் பின்புறத்தில் அமைந்துள்ள 'காராஜ்' என்று சொல்வோமே- !

அப்படியான அறை ஒன்றில் ( இது அவருடைய காரியாலயம்.) அவரை முதலில் சந்தித்தோம்.

".....இந்தப்பிள்ளை யாருடையதாக இருந்தாலும் என்னுடையது என நான் நினைக்கின்றேன். இவர் அனுப்பப்பட்டால் அது எனது பிளளையை அனுப்புவதுபோல் நான் நினைக்கின்றேன்.இவரை எப்படியும் இலங்கைக்கு திருப்பி அனுப்பாதவாறு உங்கள் திறமையை காட்டவேண்டும். ......" என்றவாறு தொலைபேசியில் யாருடனோ அவசரமாகவும் அவசியமாகவும் ஆங்கிலத்தில் கதைத்துக் கொண்டிருந்தார். இதனால் நாம் எவ்வித இடையூறும் செய்யாமல் அப்படியே நின்றோம். சம்பாஷணை தொடர்ந்தது. இடையில் எம்மைப்பார்த்தவர் " .........இது மிகவும் அவசியமானது . கொஞ்சம் பொறுப்பீர்களா? ........" என்று எம்மைக் கேட்டுவிட்டு எமது விடையை எதிர்பாராமலே தனது சம்பாசணையை தொலைபேசியில் தொடர்ந்தார்.

அன்றைய தினம் மாலை 6 மணிக்கு கொழும்புக்குத் கட்டாயமாகத் திருப்பிய னுப்பப்படவிருந்த ஒரு தமிழ் அகதி இளைஞரின் விடயமாக தன்னால் இயன்ற முயற்சிகளை தொலைபேசி மூலம் செய்துகொண்டிருந்த சம்பவம் எம்மை ஒரு கணம் திகைக்கவைத்தது. இந்த முதிய வயதிலும் சத்திரசிகிச்சைக்கு ஆளாகி சுகயீனமுற்ற நிலைமையிலும் தமிழ் அகதிகளின் நலன்களுக்காக சேவை செய்யும் அந்த மனப்பக்குவத்தின் முன் நாம் எம்மட்டோ? அகதி தமிழர் நலன்புரிவோர் சிறப்பு மலரில் தமிழர் நடவடிக்கைக்குழுவின் ( Tamil Action Committee) தலைவர் திரு மகரசிங்கம் அவர்கள் அளித்த சிறப்பு சந்திப்பில் இருந்து சிலவற்றைமட்டும் இங்கு வெளியிடுவதில் இவ்சிறப்பு மலர் மேலும் சிறப்படைகின்றது. அகதியின் வேண்டுகோளுக்கு இணங்கி இச் சந்திப்புக்கு இணங்கிய திரு மகரசிங்கம் அவர்களுக்கு அகதி நிர்வாகம் நன்றியுடை யதாகின்றது.

– ஆசிரியர்

www.tamilarangam.net



**சிங்களம் மட்டும் சட்டம் என்னை நாட்டிலிருந்து வெளியேற்றியது.**

1958ஆம் ஆண்டு சிங்கள அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட இனவாதச் சட்டமான சிங்கள மொழி மட்டும் -இலங்கை நாட்டுக்கு விசுவாசமாக சேவை செய்த எனது மனதை மிகவும் தாக்கியது. பிரிட்டன் சாம்ராஜ்யம் இலங்கையை ஆண்ட காலத்திலிருந்து இலங்கையின் நிர்வாகத்தில் தமிழ் அறிவுமான்கள் பெரும் பங்கை மட்டுமல்ல அதிக இடத்தையும் பிடித்து வைத்திருந்தார்கள் . இலங்கை அரசு தமிழர்களின் சேவையில் பெரிதும் தங்கி இருந்தது என்று சொல்லாம். சிங்கள மொழிச் சட்டத்தின் பின் தனது நாட்டிற்காக சேவை செய்கின்றோம் என்ற எண்ணத்திலிருந்து நாம் விடுபட்டுக்கொண்டிருந்தோம். 1958ஆம் ஆண்டு இடம்பெற்ற பயங்கரமான சிங்களவர்களின் இன அழிவு செயலின்போது நான் வத்தறமுல்லையில் புகையிரத இலாகாவில் கடமையாற்றிக்கொண்டிருந்தேன். நான் சிங்கள பயங்கரவாதிகளின் இன அழிப்பை நேரில் கண்டு அதை அனுபவித்தவன். என்னுடன் கடமையாற்றிய பல தமிழர் கொல்லப்பட்டனர். சொத்துக்களை இழந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் எனது அம்மா அடிக்கடி எனக்குக் கூறும் சில வார்த்தைகள் நினைவுக்கு வந்தன . பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் எம்மை ஆண்டபோது தமிழர்கள் தங்களது புத்தியாலும் பேனாவினாலும் தான் சவால் விட்டார்கள். சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் உள்ள பிளவுக்கு பிரிட்டிசாரே பொறுப்பு. நாம் இலங்கையில் சண்டைபோடுவதை விட பிரிட்டிஷ் அரசிடம் எமக்கு நீதி கேட்பது நியாயமானது என உணர்ந்தேன். நிலைமை சாதாரணமான போது திரும்பவும் பல தமிழர் தங்கள் வேலைகளுக்கு போய்விட்டனர். ஆனால் நான் போகவில்லை . தொடர்ந்து சிங்கள அரசிற்கு வேலை செய்வதையோ சிங்கள மொழியைப் படிப்பதையோ வெறுத்தேன். அந்த நாட்களில் இந்த நாட்டிற்குள் இலங்கையர் வருவது மிகவும் சுலபமான காரியம். இதனால் பிரிட்டனுக்கு இடம்பெயர்ந்தேன்.

## தமிழர் நடவடிக்கைக்குழு ஆரம்பம். (Tamil Action Committee)

நான் 1961ஆம் ஆண்டில் இந்த நாட்டிற்கு வந்தபோது இங்கு ஒரு சிறு தொகை தமிழர்களே வாழ்ந்தனர். லண்டனில் பல்வேறு பாகங்களிலும் பரவலாக இருந்தனர். இலங்கையில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்த சிங்கள அரசின் இனவாத நடவடிக்கைகளுக்கு எதிராக இந்த நாட்டில் வாழ்ந்துகொண்டு எம்மால் இயன்ற எதிர்ப்புக்களை காட்டவேண்டும் என்ற எனது நோக்கத்திற்கு ஆதரவாக பல தமிழர்கள் முன்வந்தார்கள். தனிப்பட்ட முறையில் அல்லாது கூட்டு நடவடிக்கையில் நாம் இறங்குவதற்காக தமிழர் நடவடிக்கைக்குழு 1962ஆம் ஆண்டு தென்கிழக்கு லண்டனில் ஆரம்பித்து வைத்தோம். தென்கிழக்குப் பகுதியில் இருந்த தொழில் நுட்பக்கல்லூரியில் ஏராளமான தமிழ் மாணவர்கள் கல்வி பயின்றுகொண்டிருந்தனர். பெரும்பாலான தமிழர்கள் தமது படிப்பை முடிந்த பின்பு இலங்கைக்கு திரும்பும் நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. இந்த வேளையில் எனது சேவை மிகவும் அவசியமானதொன்றாக இருந்தது. இலங்கை அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக பல சிறு கருத்தரங்குகளையும் கூட்டங்களையும் தமிழ் மாணவர்கள் பயிலும் கல்லூரிகளில் நடாத்தினோம். 1962ஆம் ஆண்டு லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் முன் பெருமளவிலான ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தினோம். தமிழ் ஈழம் என்ற சுலோகத்துடன் முதன்முதலில் லண்டனில் பிரச்சாரத்தை ஆரம்பித்தது தமிழர் நடவடிக்கைக்குழு தான். இதே காலப்பகுதியில் சிங்கள அரசின் நிர்வாகத்தில் அதிருப்தி அடைந்த பல தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறி லண்டனுக்கு வர ஆரம்பித்தனர். இவர்களின் இருப்பிடம் , கல்வி. வேலைவாய்ப்பு, குடிவரவு போன்ற நலன்களைக் கவனிக்கும் சங்கமாகவும் தமிழர் நடவடிக்கைக்குழு இயங்க ஆரம்பித்தது. லண்டனில் வெவ்வேறு திசைகளில் வாழ்ந்த தமிழர்களை எல்லாம் தமிழ் ஈழம் என்ற சுலோகத்தின் கீழ் ஒன்று சேர்த்தேன். தனிப்பட்ட முறையிலும் பொதுவாகவும் பல்வேறு நடவடிக்கைகளை கைக்கொண்டோம் ஈழத்தமிழரின் பிரச்சனையையும் சிங்கள அரசின் இன ஒடுக்குமுறையையும் பிரிட்டிஷ் மக்களுக்கு தெரியப்படுத்துவது தான் எனது முக்கிய நோக்கமாக இருந்தது. தமிழர்களின் பிரச்சனைகளில் அக்கறை கொண்ட பல்வேறு தேசிய சர்வதேச உதவி வழங்கும் தாபனங்கள் எமது நடவடிக்கைகளில் அக்கறை கொண்டன. எமது நடிவடிக்கைகளில் முக்கியமாக ஆர்ப்பாட்டங்கள் , கருத்தரங்குகள் என்பன முக்கியமாக இருந்தன. இவ் நடவடிக்கையின் போது என்னுடன் ஒன்று சேர்ந்து பணி புரிந்தவர்களின் வரிசையில் திரு எஸ் கமலராஜா , திரு தனபாலசிங்கம், திரு சதானந்தன்

www.tamilarangam.net



போன்றவர்களைக் குறிப்பிடலாம். இதே காலத்தில் வெளியிடப்பட்டு வந்த லண்டன் முரசு பத்திரிகை எமது ஆர்ப்பாட்டங்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் தந்தது. லண்டன் முரசு பத்திரிகையின் வெளியீட்டுக்கு திரு சதானந்தன் பெரும் பங்களிப்பை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1971ஆம் ஆண்டளவில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சனை சம்பந்தமான அறிக்கை ஒன்றை தயாரித்து சர்வதேச மட்டத்தில் வெளியிடவேண்டுமென்று தீர்மானித்தேன். இம்முயற்சிக்கு பல பிரிட்டிஷ் முக்கியத்தர்களை அணுகவேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஐக்கிய ராச்சியத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் சிறுபான்மை இனத்தின் உரிமைக்குழு(MRG) ஆதரவில் இப்பணியைச் செய்து முடிக்கலாம் என முயற்சி செய்தோம். வணக்கத்திற்குரிய கொட்ஸ் திரு ரோய் ஷா , சேர் ஜோன் பொஸ்டஸ் , வணக்கத்திற்குரிய பிதா டேவிற் அஸ்டர் ஆகியோர் உதவியுடன் 1974ஆம் ஆண்டு "இலங்கைத் தமிழர்" என்ற அறிக்கை ஒன்றை வெளியிடச்செய்தேன். இந்த நடவடிக்கைக்கு ஆரம்பத்தில் அறிவுரை தந்தவர்களில் முன்னாள் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திரு வீ என் நவரத்தினம் அவர்களும் ஆவார். இந்த அறிக்கை இலங்கைத் தமிழர்களின் நிலைமை பற்றிய தெளிவான விளக்கத்தை பிரிட்டிஷ் மக்களுக்கு மட்டுமன்றி சர்வதேச மட்டத்தில் கொடுக்கக்கூடியதாக இருந்தது . பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக விவாதங்களை நடத்துவதற்கும் இந்த அறிக்கை பெரும் உதவியாக இருந்தது . 1979ஆம் ஆண்டு எனது பணியில் ஒரு முக்கிய ஆண்டாக இருந்தது. அந்தக்காலத்தில் பிரிட்டிஷ் அரசாக இருந்த தொழிற்கட்சியின் வெளிநாடுகளுக்கு உதவி வழங்கும் விவகாரங்களுக்கு பொறுப்பாக இருந்த அமைச்சர் இலங்கை மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்கு 100 மில்லியன் பவுண் பணத்தை உதவியாக வழங்க முன்வந்திருந்தார். இது இலங்கை அரசின் மீது பிரிட்டிஷ் அரசு வைத்திருந்த நம்பிக்கைக்கு எடுத்துக்காட்டாக இருந்தது. இந்த நேரத்தில் தமிழர்களுக்கு எதிராக சிங்கள அரசின் பாகுபாடு பற்றியும் மனித உரிமைகள் மீறல் பற்றியும் எடுத்துக்காட்டி பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினோம். இலங்கை அரசிற்கு உதவி வழங்கக்கூடாதென சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு மகஜர் ஒன்றையும் கையளித்தோம். இச்சந்தர்ப்பத்தில் முதன்முதலாக மனித உரிமைகள் என்ற பதத்தைப் பாவித்து எமது நடவடிக்கைகளை பலமடையச் செய்தோம்.

## தஞ்சம் கோரும் தமிழருடன் திசைதிரும்பிய பணிகள்.

1983ஆம் ஆண்டுக்குப் பின்பு தமிழர்கள் பெருமளவில் நாட்டிற்கு தஞ்சம் கோரி வரத்தொடங்கினர். 1978இலிருந்து இங்கு வரும் சில தமிழர்கள் தஞ்சம் கோரி விண்ணப்பம் செய்திருந்தாலும் அவர்களுக்கு பெரிய அளவிலான சேவை தேவையாக இருக்கவில்லை. 1984ஆம் ஆண்டு தமிழ் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்தபோது எனது சேவையின் தேவை அதிகரிப்பதை உணர்ந்தேன். இதனால் அந்த ஆண்டில் நான் உத்தியோகபூர்வமாக பிரிட்டிஷ் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றேன்.. தமிழ் அகதிகளின் நலன்களைக் கவனிக்கும் அமைப்புக்கள் இல்லாத அந்த நேரத்தில் என்னிடம் இருந்த வசதிகள் உபகரணங்களைப் பாவித்து என்னிடம் உதவி தேடி வந்த எல்லோருக்குமே என்னால் இயன்றவற்றை செய்துவந்தேன். இன்று வரை சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்களின் விண்ணப்பங்களை தமிழர் நடவடிக்கைக்குழுவின் சார்பில் கையாண்டேன். தமிழ் அகதிகளின் விண்ணப்பங்களை பாதுகாப்பு அற்ற இனம் என ஏற்றுக்கொள்ள பிரிட்டிஷ் அரசு மறுத்தது. பிரித்தானிய அகதிகள் பணியகம் உட்பட பல தேசிய நிறுவனங்களின் உதவியுடன் நாம் செய்த நீண்ட கோரிக்கைகளை அடுத்து 1985ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசு இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்பு அற்ற நிலைமை உண்டு என்பதை ஒத்துக்கொண்டு விதிகளுக்கு புறம்பான வகையில் இருப்பிட அனுமதி வழங்கும் முறையை கையாளத் தொடங்கியது. பொதுவான கொள்கை அடிப்படையில் அனுமதிகள் வழங்கப்பட்டாலும் தமிழ் அகதிளின் சார்பில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படும்போது எனது நேரத்தை பொருட்படுத்தாது பூரணமான விண்ணப்பங்களை தயாரிப்பதில் ஈடுபட்டு வந்தேன். நான் தமிழ் அகதிகளின் சார்பில் உள்நாட்டு அலுவலகத்திற்கு விண்ணப்பங்களை செய்வதுடன் மாத்திரம் எனது சேவையை மட்டுப்படுத்தவில்லை . தமிழ் மக்கள் ஒரு ஒடுக்கப்பட்ட இனம் என்பதனை சர்வதேச நாடுகள் ஏற்றுக்கொள்ள வேண்டு என்பதில் பிரச்சாரத்தில் தொடர்ந்துஈடுபட்டுக் கொண்டிருந்தேன் . தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் உண்ணாவிரதம் ஆர்ப்பாட்டம் என்பவற்றை இந்நாட்டிலும் இந்நாட்டிற்கு வெளியேயும் செய்துகொண்டு வந்தேன். இந்நாட்டின் தேசிய தொடர்பு சாதனங்கள் மூலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்திகள் கட்டுரைகள் பேட்டிகள் விபரணப்படங்கள் என்பவற்றை வெளியிடச்செய்தேன். 1984–87 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் இலங்கை பற்றிய செய்திகள் தொலைக்காட்சிகளிலும் வானொலிகளிலும் தேசிய ரீதியில் வெளிவந்தவண்ணம் இருந்தன. இவை பிரிட்டிஷ் மக்களுக்கு இலங்கைத் தமிழரின் பிரச்சனை பற்றியும் இலங்கைத் தமிழ் அகதிகளின் வருகை பற்றியும் தெளிவான விளக்கத்தை கொடுப்பவையாக இருந்தன.

**தஞ்சம் கோருவோர் வருகையைத் தடைசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகளினால் தமிழர் வருகை குறையவில்லை.**

1985ஆம் ஆண்டளவில் திறந்த விசா முறையை பாவித்து இந்நாட்டுக்கு தஞ்சம் கோரி வந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததைத் தொடர்ந்து விசாக்கட்டுப்பாட்டை அரசு கொண்டுவந்தது. இவ்விசாக்கட்டுப்பாட்டினால் தமிழரின் வருகையைக்கட்டுப்படுத்தலாம் என அரசு எண்ணியது. ஆனால் அதற்கு மாறாக பல்வேறு இலகுவான வழிகளில் பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் இங்குவரத் தொடங்கிவிட்டனர். 1986–89ஆம் ஆண்டுக்காலத்தில் முன்னைய ஆண்டுகளைவிட பலமடங்கு அதிகமாக தமிழர்கள் தஞ்சம் கோரி வந்தனர். இதற்குப்பின்பு விமானங்களுக்கான தண்டனைக்கட்டணம் அறவிடும் சட்டமுறையைக் கொண்டுவந்தது. அதைத்தொடர்ந்து 1993ஆம் ஆண்டு ஜுலை மாதம் தஞ்சம் கோருவோர் மேன்முறையீட்டுச் சட்ட மூலத்தைக் கொண்டுவந்தது. தமிழர் வருகையை இந்த சட்டமூலங்களினால் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதை இப்போது பிரிட்டிஷ் அரசு உணர்கின்றது. தற்போதைய இலங்கையின் நிலைமை பற்றி பிரிட்டிஷ் அரசு நன்றாக உணர்ந்துள்ளது. ஆனால் உண்மையில் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது. கடந்த 12 வருட காலத்தில் இலங்கையில் ஆளும் கட்சிகளில்தான் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றதே தவிர தமிழர் பிரச்சனையில் எவ்வகையான மாற்றமும் இல்லை. தற்போது முன்பிருந்த காலங்களை விட மிகவும் உக்கிரமமான ராணுவத்தின் துன்புறுத்தல்களில் தமிழ் மக்கள் அவஸ்தைப்படுகின்றார்கள். அரச ராணுவம் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் என்று மில்லாதவாறு பெரிய அளவிலான அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றது. இந்த செய்திகள் தகவல்கள் எல்லாம் முழுமையாக பிரிட்டிஷ் அரசிற்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தாலும் அதிகாரிகள் , எதுவும் நடக்காதது போல் பாசாங்கு செய்கின்றார்கள். இப்போது இது பற்றி பல கடிதங்களை தொடர்ச்சியாக குடிவரவு அமைச்சர்,அதிகாரிகள் ஆகியோருக்கு எழுதிக்கொண்டேயிருக்கின்றேன். சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போது தொலைபேசி மூலமாகவும் நேரடியாகவும் விபரித்துக்கொண்டேயிருக்கின்றேன் . தமிழ் அகதிகளின் விண்ணப்பங்களை நிராகரிக்கும் நடவடிக்கைகளை மறுபரிசீலனை செய்து மனிதாபிமான அடிப்படையில் தமிழ் அகதிகளுக்கு இருப்பிட அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளேன்.

**தமிழர் நலன் புரிவோர் கூட்டு நடவடிக்கைகளில் இறங்கும் காலம் வருகின்றது.**

தமிழ் அகதிகளுக்காக கடமை புரிகின்ற தனிப்பட்டவர்கள் சட்டத்தரணிகள் அல்லது அமைப்புக்கள் புதிய உத்திகளை கையாண்டு கூட்டு நடவடிக்கைகளில் இறங்க வேண்டிய அவசியம் இப்பொழுது இருக்கின்றது. உள்நாட்டு அதிகாரிகளின் அணுகுமுறைக்கு ஏற்ப தஞ்சம் கோரும் தமிழர்களின் விண்ணப்பம் செய்யும் முறைகளை நாம் கையாளவேண்டும். தனிப்பட்டவர் தகுதி அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும் விண்ணப்பங்களை தகுதியாக்கும் முறையில் தயாரிக்க வேண்டும். அண்மைக்காலங்களில் உள்நாட்டு அலுவலகத்தினால் எனக்கு எழுதப்பட்ட கடிதங்களில் அகதிகளின் சார்பில் முறையான கோரிக்கைகள் முன்வைக்கப்படவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இப்போதெல்லாம் தமிழ் அகதிகளுக்காக கடமையாற்றுகின்ற அமைப்புக்களின் கடமைகள் முற்றாக சட்டத்தரணிகளுக்கு மாற்றப்பட்டது போல் தெரிகின்றது . இதனால் தமிழ் அகதிகள் அமைப்புக்கள் மீது நம்பிக்கை இழந்துகொண்டு வருகின்றார்கள். தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்களை தயாரிப்பதில் ஈடுபவோர் அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்து முதலாவது தடவையாகவே தெளிவான முறையில் கவனத்திற்குரிய விடயங்களைப் புகுத்தி விண்ணப்பத்தை அனுப்பவேண்டும். ஏனென்றால் முதல் விண்ணப்பத் தயாரிப்பிலேயே அகதியின் முழுஎதிர்காலமும் நிர்ணயிக்கப்படுகின்றது. தமிழ் அகதிகளுக்காக கடமையாற்றும் ஸ்தாபனங்கள் நிறுவனங்கள் தமிழ் அகதிகளுக்கு வழங்கும் சேவையில் இருந்து

ஒதுங்குவார்களேயானால் அவர்களின் தொடர்ச்சியான நிலைத்தலுக்கு பாதகம் ஏற்படுமென நான் எதிர் பார்க்கின்றேன்.

**உடல் நிலை இடம் கொடுக்கும்வரை பணியைத் தொடருவேன்.**

கடந்த 32 வருடங்களாக ஆற்றிவரும் பணியை வருமானத்திற்காகவோ அல்லது பெயருக்காகவோ அல்லது சுய விளம்பரத்திற்காகவோ நான் செய்யவில்லை. என்னிடம் உதவியை நாடி வருபவர்களுக்கு கூடியவரை அந்த உதவிகள் கிடைக்க எனது சேவையை செய்துள்ளேன். நான் ஒரு முன்கோபக்காரன் என விமர்சிப்பது எனக்குத் தெரியும். நான் கோபிப்பது உண்டு. எனது கோபம் தனிப்பட்டவர்கள் மீது அல்ல. அவர்க ளுடைய நடவடிக்கை மீது தான். இருந்தாலும் நான் யாருடன் கோபத்துடன் நடந்துகொண்டேனோ அவர்கள் எல்லோரும் அடுத்த நிமிடத்தில் மிகவும் நெருங்கிய நட்புடையவர்களாக மாறிவிடுவார்கள். நான் நம்புகின்ற அரசியல் சித்தாந்தம் கொள்கை என்பவற்றின் பயனாக ஒரு தடவை எனது உயிருக்கும் ஆபத்து ஏற்பட்ட சம்பவமும் உண்டு. துப்பாக்கி கொண்டு எனது வீட்டிற்குள் வந்து என்னை மிரட்டுகின்ற அளவுக்கு என்னுடைய நடவடிக்கைகள் ஏதும் அமைந்தனவா என்று இப்போதும் எனக்கு சந்தேகமாக இருக்கின்றது.

ஆனால் இச்சம்பவம் விடுதலைப்புலிகளினால் நடாத்தப்பட்ட மாமெரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபின் சிலநாட்களில் இடம் பெற்றது. எனது நாளாந்த பணிகளின் செலவுக்காக சில நல்மனம் படைத்தவர்களின் பண உதவிகளில் இருந்தும் எனது ஓய்வூதியத்தில் இருந்தும் எனது பணிகளைச் செய்கின்றேன். கடந்த 32 வருடங்களுக்கு மேலாக நான் செய்துவரும் பொதுப்பணிக்கு இந்த நாட்டின் எந்த அரசதாபனங்களில் இருந்தோ அல்லது உதவி வழங்கும் தாபனங்களில் இருந்தோ பண உதவியை பெற நான் முயற்சிக்கவில்லை. நான் எனது நடவடிக்கைகளுக்காக ஒரு பிரத்தியேகமான இடவசதி தேவைப்பட்டது தான் நான் குடியிருந்த வீடுகளின் ஒதுக்குப்புறத்தில் எனது காரியாலயத்தை அமைத்துக்கொண்டேன். நான் இதுவரை காலமும் செய்து வந்த பணியை எனது காலத்திற்குப் பின்பு தொடர்ந்து செய்வதற்கு பலர் முன் வருவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு . எனது சேவையின் போது இலங்கைத் தமிழர்களுக்காக நான் எழுதிய தயாரித்த தேடிய, பத்திரங்கள் ஆவணங்கள் தஸ்தாவேஜுக்கள் முழுவதையும் சேர்த்து ஒரு தொகுப்பாக பாதுகாக்க வேண்டுமென்ற எனது நீண்ட நாள் ஆசை நிறைவேற வேண்டும் .இதற்குரிய சகல வசதிகளும் எனது உடல் நிலைமையும் இடம் கொடுக்கவேண்டும் என பிரார்த்திக்கின்றேன். எனது கடந்தகாலப் பணிகளின் போது என்னுடன் தொடர்ந்து கைகொடுத்து உதவிவருபவர்களில் திரு சதானந்தன், திரு பாலசுந்தரம், ஆகியோரை நிட்சயம் நினைவு கூரவேண்டும். எனது சேவைகளுக்கும் பணிகளுக்கும் ஆதரவு வழங்கும் நல்மனம் படைத்தோருக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

KRISH RATNA & CO
SOLICITORS

R.D.Ratnasingham
N.Krishnarajah
Vijaya Ratnasingham(Associate)
For
Residential & Commercial Conveyancing
Criminal & Civil Litigation
Immigration and Matrimonial Matters
Police station Advice undertaken
(All 24 Hours service)
61- A/2, KING STREET, SOUTHALL, MIDDLESEX
TEL: 0181 574 6303 FAX : 0181 574 1096

www.tamilarangam.net


# PARAM & CO
## SOLICITORS

** Civil Litigation*
** Commercial Litigation*
** Immigration * Personal Injuries*
** Conveyancing * Entertainment Law*
** Residential & Commercial*
** Police Station Advice & Assistance*
** Accident Claims * Matrimonial matters*
** Welfare benefits & Social security matters*

Legal Aid

S. Paramalingam. BA, LLM
Assistant Solicitors :
Miss R. Kulasegaram,
Mr. T. Thanarajasingam

Legal Aid

**TEL : 0181 200 3500**
**FAX : 0181 200 1360**

**SEGARAM HOUSE, 221 EDGEWARE RD**
**COLLINDALE, LONDON NW9 OSR**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# SOORI
## SOLICITORS

Legal Aid

உங்களின் சட்டம் சம்பந்தமான
சகல ஆலோசனைகளுக்கும்
தேவைகளுக்கும்
நீங்கள் தொடர்பு
கொள்ளவேண்டிய
சட்டத்தரணிகள்

**Criminal, Civil**
**Matrimonial Litigation**
**Conveyancing**
**Liquor Licencing**
**Will & Probate**
**Police Station Advice**
**& Assistance**
**Legal Aid**

**சூரி**
**சட்டத்தரணிகள்**

**44 High Street**
**Colliers Wood**
**London SW19 2AB**
**Tel : 0181 544 9285**
**Fax : 0181 540 9237**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "கிறீன்போம் சொலிசிற்றர்"

இலங்கையில் இருந்து இங்கிலாந்துக்கு வந்து தஞ்சம் கோரியுள்ள தமிழ் அகதிகளுக்கு இந்நாட்டில் நடைமுறையிலுள்ள சட்ட முறைமை பற்றியும் முக்கியமாக இங்குள்ள சட்டத்தரணிகளின் கடமை அதிகார வரம்பு என்பவைபற்றியும் இலவச சட்ட வசதி பற்றியும் அறிந்திருக்க வேண்டியது அவசியம் ஆகவே சகலருக்கும் புரிந்து கொள்ளக்கூடிய இலகு மொழியில் இக்கட்டுரையை எழுதுகின்றேன்.

இலங்கையில் நிலவும் சட்ட முறைக்கும் இந்த நாட்டில் நிலவும் நட்ட முறைக்கும் பெரிய வேறுபாடுகள் இருக்கின்றன. இலங்கையில் அண்மைக்காலம் வரையில் (Proctors)புறக்கராசி,அப்புகாத்து (Advacate) என்ற பிரிவுகள் இருந்தன. கீழ் மட்ட நீதிமன்றங்களில் புறக்கராசிகளும், மேல் மட்ட நீதிமன்றங்களில்

சட்டத்தரணி திரு எம். மார்க்கண்டன்

புறக்கராசியின் அனுசரணையுடன் அப்புக்காத்துமாரும் ஆஜராக முடியும். 1970ஆம் ஆண்டுகளில் இந்த வேறுபாடு நீக்கப்பட்டு சட்டத்தரணிகள் என்ற ஒரேயொரு வகையினர் சகல நீதி மன்றங்களிலும் ஆஜாராகக் கூடியதாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த நாட்டில் இன்னமும் Solicitors, Barristors என்ற வேறுபாடு இருக்கின்றது. இன்னுமொரு வேறுபாடு என்னவெனில் இலங்கையில் சட்டத்தரணிகள் நீதி மன்றத்தில் ஆஜாராகும் கடமையே முக்கியமாக கொண்டிருக்கின்றனர். ஆனால் இந்நாட்டில் சட்டத்தரணிகள் ஸ்தாபனங்களாக இயங்கி பல வேறுபட்ட விடயங்களை ஒரு அரசு காரியாலயம் போல நடத்துகின்றார்கள். இங்கு உள்ள ஒரு சட்டத்தரணி நீதிமன்றங்களுக்கு செல்வது மிகக்குறைவு. காரியாலயத்தில் இருந்து பணிபுரிவதனாலேயே தங்கள் வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியும். இந்த நாட்டில் எந்தவொரு வழக்கும் 90 வீதம் சட்டத்தரணிகள் ஸ்தாபனங்களுக்கிடையில்க்கிடையில் நடைபெறும் கடித போக்குவரத்தினாலேயே தீர்த்துக்கொள்கின்றார்கள். அநேகமான வழக்குகள் நீதிமன்ற விசாரணைக்கு போகாமலேயே சமாதானமாக தீர்ந்துவிடும். உதாரணமாக ஏதாவது ஒரு நட்டயீட்டு வழக்கு தாக்கல் செய்தால் அதற்குரிய சான்றுகளை சேகரித்து மறுபக்கத்திற்கு சமர்ப்பித்து நீதிமன்றத்துக்கு போகாமல் நட்டத்தை கட்டினால் செலவு மீதமாகுமென்று பேசி நட்டத்தை பெற்றுக்கொள்ள முடியும். அதேபோல மற்றபகுதியினரும் ஒரு குறிப்பிட்ட தொகையை தான் தரமுடியும் இதை ஏற்க மறுத்தால் இருபக்க செலவையும் நீரே ஏற்க வேண்டும் என்று கூறி முடிவில் ஒரு சமாதான தீர்வு ஏற்பட செய்வர். அதைவிட இந்நாட்டு சட்டத்தரணிகள் வழக்கு சம்பந்தமான வேலைகளை விட மக்களுக்கு தேவையான சகல விதமான பிரச்சனைகள் பற்றியும் உரிய தாபனங்களுடன் தொடர்பு கொண்டு தீர்த்து வைப்பர். இலங்கையில் காணிகள் சம்பந்தமாக நொத்தாரிசுகளின் வேலைக்கும் இங்குள்ள சட்டத்தரணிகளின் வேலைக்கும் சரியான வேறுபாடு இருக்கின்றது.

## அரச சட்ட உதவி ( Legal Aid)

இலங்கையிலும் பணவசதியில்லாத கிரிமினல் குற்றவாளிகளுக்கு இலவச சட்ட உதவி கிடைக்க ஏற்பாடு உள்ளது. அது மிகக் குறைந்த அளவிலேயே பாவனையில் உள்ளது. காரணம் ஒரு கொலைக் குற்றவாளி சட்டத்தரணிக்கு பணம் கட்டும் நிலையில் இல்லாவிட்டால் வழக்கை விளங்கும் நீதிபதி அங்கு பிரசன்னமாயிருக்கும் ஒரு சட்டத்தரணியை அவருக்காக வாதாடும்படி நியமிப்பார். இதற்கான கொடுப்பனவு மிக அற்ப தொகையாகவே இருக்கும். அநேகமாக வழக்குகள் இல்லாமல் தூங்கும் சட்டத்தரணிகளே தங்களது திறமையைக் காட்ட இதையொரு சந்தர்ப்பமாக ஏற்றுக்கொள்வர். ஆனால் இந்த நாட்டில் Legal Aid இந்நாட்டு வருமானத்தின் ஒரு கணிசமான தொகையை செலவழிக்கின்றது. இதை சற்று விபரமாக ஆராய்வோம்.

முதலில் Green Form Advice scheme என்பதற்கும் Legal Aid என்பதற்கும் உள்ள வித்தியாசத்தை தெரிந்து கொள்ள வேண்டும். Green Form Advice scheme என்பது சட்டத்தரணிகள் காரியாலயம் குடிவரவு காரியாலயம் போன்ற இடங்களில் ஆலோசனை வழங்கல் , கடிதம் எழுதுதல் ஒரு விடயத்தை சமாதானமாக தீர்ப்பதற்கும் பேரம் பேசுதல் எழுத்து மூலமாக விசாரணைக்கு சமர்ப்பித்தல் போன்றவற்றை செய்வதாகும். இதன் கீழ் ஆங்கிலச் சட்டத்திற்கு உட்பட்ட பிரச்சனையை மாத்திரமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்யப்படலாம். உதாரணமாக உடல் தீங்கு , தொழில் பிணக்கு, கடன்பிரச்சனை, வீட்டுப்பிரச்சனை அரச உதவிப்பணம் பெறுவதில் பிரச்சனை, சிறு குற்றங்கள் குடிவரவுப் பிரச்சனை போன்ற சகல விடயங்களுக்கும் ஆலோசனை வழங்கலாம். ஸ்கொட்லண்ட் பிரதேசத்தில் Green Formக்குப் பதிலாக Blue form பாவிக்கின்றார்கள்.

இதைவிட பொலிஸ், சிவில், கிறிமினல் போன்ற வேறுபட்ட சட்ட உதவி ஏற்பாடுகளும் உள்ளன. பொலிஸ் நிலையத்தில் ஒரு குற்றத்திற்காக ஒருவர் விசாரிக்கப்படும் போது அவர் எவ்வளவு பணக்காரராக இருந்தாலும் ஒரு சட்டத்தரணியின் இலவச ஆலோசனைக்கு உரிமை உள்ளவராகிறார். Green Form இலவச ஆலோசனையை பெறுவதற்கு ஒருவரின் கிழமை வருமானம் 72 பவுண்ஸ்சுக்கு மேலாக இருக்கக் கூடாது. ABWOR என்பது மஜிஸ்ரேட் கோட்டில் சிறு சிவில் வழக்குகளிலும் சில Tribunalவிசாரணகளிலும் அருகேயிருந்து ஆலோசனை வழங்க அனுமதி வழங்கப்படும். Civil Legal Aid என்பது கொலை களவு பேன்ற சகல குற்ற வழக்குகளில் ஆஜராவதற்கான அனுமதியாகும்.

Green form ஆலோனையைப் பெறுவதற்கு ஒரு நபருக்கு ஒரு சட்டத்தரணியின் ஆலோசனையை மட்டும் பெற உரிமை உண்டு. அதே விடயத்தில் பிறிதொரு சட்டத்தரணியின் ஆலோனையைப் பெற விரும்பினால் தகுந்த காரணங்கள் காட்டி Legal aid Boardன் முன் அனுமதி பெற்றே மாற வேண்டும். ஒரு விடயத்திற்கு இரு சட்டத்தரணிகள் இடம் Green form sign பண்ணுவது குற்றமாகும்.

Green form ஆலோசனை இரண்டு மணித்தியால வேலைஉக்கு மட்டுமே உண்டு. அதற்கு கூடுதலாக வேலை செய்ய வேண்டி ஏற்பட்டால் வேலை செய்வதற்கு முன்னராக Legal Aid Boardக்கு விண்ணப்பித்து அனுமதி பெற வேண்டும். அனுமதி பெற முன்பு செய்த வேலை எதற்கும் பணம் கிடையாது எக்காரணம் கொண்டும் பின் நோக்கி அனுமதி தரப்படமாட்மாது. தொலைபேசி மூலம் அனுமதி பெறமுடியும் எனினும் சனி ஞாயிறு போன்ற விடுமுறைகளில் Legal Aid office மூடப்படுவதனால் அனுமதி கிடைப்பதில்லை. செய்யும் வேலைக்குப் பணமும் கிடைக்காது.

எமது அகதிகள் அனைவரையும் பொறுத்த வரையில் அகதிகள் சம்பந்தமான விடயங்களைப் பற்றி சற்று விரிவாக பார்ப்போம். அகதி இந்த நாட்டிற்கு வந்து இறங்கியதில் இருந்து பின்வரும் சம்பவங்கள் நடைபெறும்.

1. ஆரம்ப விசாரணை(Proforma Interview).
2. தேர்வுப்பகுதி விசாரணை(Screening Unit Interview)
3. அகதி வினாக்கொத்து பூரணப்படுத்துதல்
4. பூரண அகதி நேர்முக விசாரணை.
5. அகதி விண்ணப்ப நிராகரிப்பு விசாரணை.
6. தடை முகாம்களில் சமூகமளித்து ஆலோசனை வழங்கல்.
7 மேல்முறையீட்டு விசாரணை
   1. விசேட நடுவர் முன் விசாரணை
   2. Appel tribunal அனுமதி கோரி விண்ணப்ப விசாரணை.
   3. Tribunal- பூரண விசாரணை.
   4. Judicial review அனுமதி கோரி விசாரணை.
   5. Judicial review renewed application to court of appeal
   6. Court of appeal மேண்முறைமீட்டு விசாரணை.
   7. House of Lords (பிரபுக்கள் சபை ) மேண்முறைமீடு
   8. Europian court of human rights.

உள்நாட்டு அலுவலகத்தில் நடைபெறும் தேர்வுப்பகுதி விசாரணைக்கும் அடிப்படை விசாரணைக்கும் சட்டத்தரணி பிரசன்னமாயிருக்க Green form கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது. அத்துடன் விசேட நடுவர் முன் நடக்கும் விசாரணைக்கும் Tribunal விசாரணைக்கும் Legal aid Certificate green form advice எதுவும் கிடையாது. Judicial review என்பதும் சகல விண்ணப்ப தாரிக்கும் உரிமையானதொன்றல்ல. கீழ் மன்றுகளில் நடைபெற்ற விசாரணைகளின் போது சட்டத்தவறு விடப்பட்டுள்ளது என்று Barrister அத்தாட்சிப் பத்திரம் வழங்கியிருக்க வேண்டும். அப்படி வழங்கினாலும் கூட Legal Aid Board



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



certifacte தர மறுக்கின்றது. சில வழக்குகளை விசாரித்த மேல் நீதிமன்ற நீதிபதிகள் அத்தாட்சிப்பத்திரம் வழங்கிய Barrister ஐயும் certifacte வழங்கிய Legal Aid Board ஐயும் பாரதூரமாகக் கண்டித்ததன் காரணமாக தற்போது எந்த ஒரு Barrister ம் அத்தாட்சிப்பத்திரம் தர மறுக்கின்றார்கள். சில வழக்குகளில் சட்டத்தரணிகளே மறுபக்க சிலவையும் கட்ட வேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் என்னவெனில் எமது அகதி விண்ணப்பதாரிகள் ஆரம்ப விசாரணைகளில் ஆதாரபூர்வமான சான்றுகளை பகர்ந்து விசேட நடுவர் முன்னிலையில் நடக்கும் விசாரணையின் போதாவது வெற்றி பெறத் தவறினால் அதற்கு மேல் சட்டமூலம் ஏதாவது வெற்றி பெறமுடியும் என்று எதிர்பார்ப்பது ஏமாற்றத்தையே கொடுக்கும்.

எமது அகதிகள் சிலருக்கு மேலே நான் கூறியுள்ள விடயங்கள் புரியாததன் காரணமாக தாம் சம்பந்தப்பட்ட சகல விடயங்களும் சட்டத்தரணிகள் இலவசமாக செய்ய வேண்டுமென்று நினைக்கின்றார்கள். முக்கியமாக மேல்முறையீடு செய்வதற்கு Legal Aid கிடையாது என்று சொல்லி Barrister க்கு கட்ட வேண்டிய பணத்தைக் கேட்டால் Green form sign பண்ணினார்கள் தானே என்கின்றார்கள். சிலர் பணத்தை கொடுத்துவிட்டு solicitors Green form கையொப்பமும் வாங்கி பணமும் பெற்றுவிட்டார். என கதைக்கின்றார்கள். இதைவிட தேர்வு நேர்முக விசாரணைக்கும் தற்காலிக அனுமதி புதுப்பித்தல் போன்ற வற்றுக்கும் சட்டத்தரணிகளை வரும்படி கேட்கிறார்கள். வரமுடியாமையை எடுத்துச் சொன்னால் " நான் கிறீன்போம் சைன் பண்ணித் தந்தனான்தானே என்று சொல்கிறார்கள். சில சமயங்களில் சட்டத் தரணிகளை இழிவுபடுத்துவதுபோல் "கிறீன்போம் சொலிசிற்றர்" என பரிகசிக்கிறார்கள். ஆகவேதான் சட்டப்பண உதவி இல்லாமல் பணம் பெற்று வேலை செய்தால் கூடிய கௌரவத்துடன் பணியாற்ற முடியும் என்பதுடன் உண்மையில் தகுதியுள்ள சட்டத்தரணிகள் பேரெடுக்க முடியும் என்பது என்கருத்து.

இந் நாட்டில் சட்டத்தரணிகள் நிறுவனங்கள் தங்களை விளம்பரங்கள் செய்யலாம் என்ற உரிமை இருப்பதனால் சன்றைஸ் வானொலிபோன்ற ஒலிபரப்புமூலம் சிலர் தங்களை கூடுதலாக முக்கியப்படுத்தவும் தவறான விளக்கங்களையும், அபிப்பிராயங்களையும் எதிர்பார்ப்புக்களையும் தமிழ் அகதிகள் பெறுகின்றார்கள். பல சந்தர்ப்பங்களில் சன்றைஸ் வானொலியில் இடம்பெற்ற சமூகப் பலகணி நிகழ்ச்சி ஒன்றின்போது முக்கியமான சில வழக்குகள் உண்மைநிலை மறைக்கப்பட்டு விமர்சனம் செய்யப்பட்டதை இங்கு நான் சுட்டிக்காட்டவேண்டியதாகவுள்ளது. உதாரணமாக அண்மையில் மேன்முறையீடு செய்வதற்கு அனுமதிகேட்ட வழக்கு ஒன்றை விசாரணை செய்ய அனுமதி கிடைத்தமையை வழக்குக்கிடைத்த வெற்றியென்ற தோரணையில் சட்டத்தரணிகள் திரித்துக் கூறுவதினால் சம்பந்தப்பட்ட சட்ட நிறுவனத்திற்கு மாத்திரமல்ல மற்றைய நிறுவனங்களுக்கும் பாதிப்பு குறைய வாய்ப்பு உண்டு. இப்படியான பிரச்சாரத்தினால் தமிழ் அகதிகள் ஸ்திரமின்றி அங்குமிங்குமாக அலைந்து சட்டதரணிகளிடம் வழக்குகளை மாற்றுகிறார்கள். எனவே சட்டத்தரணிகள் தங்களுக்குரிய அதிகார வரம்போடு பொறுப்போடு நடந்து கொள்ளவேண்டிய அவசியத்தை இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன்.

இந்த சந்தர்ப்பத்தில் சகல தமிழ் அகதிகளையும் சட்டத்தரணிகளையும் வெகுவாக பாதிக்கக்கூடிய பிரச்சாரததையும் அதனுடன் தொடர்புடைய பாரதூரமான குற்றத்தையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நிராகரிக்கப்பட்டு நாடுகடத்தப்படுவதற்கு கட்டளை பெறப்பட்ட ஒரு தமிழ் அகதி தமது நிலைமைக்கு தமது விண்ணப்பத்தை கையாண்ட சட்டத்தரணியே காரணம் எனவும், 6 மாத காலத்தின்பின்பு ஒரு குறிப்பிடப்பட்ட வேறு சட்டத்தரணியிடம் தனது விண்ணப்பத்தை வேறு பெயரில் அதாவது தனது சொந்தப் பெயரில் அல்லாது புதிதாக விண்ணப்பித்து வெற்றி பெறலாம் என எண்ணும் அபிப்பிராயத்தை பொள்வதற்கு நான் மேற்குறிப்பிட்ட சில சட்டத்தரணிகளின் பொறுப்பற்ற தன்மையே காரணம் என நான் நம்புகிறேன்.


# லட்சுமி பதிப்பகம்
# LUXMY PATHIPAKAM
உங்கள் அச்சமைப்புத் தேவைகளுக்கும் அழகுமிகு வடிவமைப்புகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

தொலைபேசி:

**0181 924 8115**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# IVAN KRAMA & CO

## SOLICITORS

## ADMINISTRATORS OF OATHS

**MR. PARAKRMA RANASINGHE**

**MR.M.IVAN PERERA**

**WE SPECIALISE IN**

*** IMMIGRATION & NATIONALITY * CRIME * GENERAL LITIGATION**

*** CONVEYANCING * HOUSING WELFERE BENEFITS**

*LEGAL AID WORK UNDERTAKEN*

**CONTACT FOR ALL YOUR LEGAL SERVICES**

**348A KILBURN HIGH ROAD**

**LONDON NW6 2RT**

**TEL: 0171 624 8814 FAX : 0171 624 8813**

# KSP SUPER FOODS

**KSP SUPER FOODS**

8.HIGH STREET NORTH
MANOR PARK
LONDON E12 6SA
TEL: 0181 471 7806
0181 552 8053

சகலவிதமான
இலங்கை,இந்தியப்
பொருட்களையும்
ஒடியோ வீடியோக்களையும்
மலிவுவிலையில்
மனநிறைவோடு பெற
நாடவேண்டிய நம்பிக்கையான
ஸ்தாபனம்

**KSP SUPER FOODS**

7.149 BARKING ROAD
EASTHAM
LONDON
E6
TEL:
0181 503 5183




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 56ஆயிரம் தஞ்சம் கோருவோர் விண்ணப்பங்கள் தேக்கம்.!

### அரச பண உதவிகளை ஒழிக்க நடவடிக்கை!

இந்நாட்டில் தஞ்சம் கோரி விண்ணப்பம் செய்து உள்நாட்டு அலுவலகத்தின் முடிவுகளை எதிர்பார்த்து இருக்கும் பல்லாயிரம் அகதிகளுக்குரிய உதவிப்பணங்கள் (டோல்) வீட்டு வசதிப் பணம் என்பவற்றை இல்லாமல் செய்வதற்கு தற்போதைய ஆளும் கொன்சவேட்டிவ் கட்சியின் உள்நாட்டு விவகார அலுவல் செயலாளர் திரு மைக்கல் ஹவாட் முடிவு செய்துள்ளார். இது பற்றிய பிரமாணங்களை எதிர்வரும் ஜூலை மாதத்தில் வெளியிடுவாரென எதிர்பார்க்கப்படுகின்றது. குடிவரவு இலாகாவில் பரிசீலனைக்காக காத்து தேங்கிக் கிடக்கும் சுமார் 56 ஆயிரம் தஞ்சம் கோருவோர் விண்ணப்பத்தில் 80 வீதமானோர் அகதி அந்தஸ்து பெறுவதற்கு தகுதி அற்றவை எனவும் கடந்த ஆண்டில் சுமார் 32 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்ததாகவும் இவற்றுடன் சுமார் 40 ஆயிரம் பேர் வரை குடும்ப தாபரிப்புக்கு உடையவர்கள் என்றும் குடிவரவு இலாகா விபரங்கள் வெளியிட்டுள்ளது. மேலும் கடந்த பத்து வருடங்களுக்கு முன்பு பிரிட்டனில் தஞ்சம் கோரி விண்ணப்பம் செய்தோரின் தொகை மூவாயிரத்திற்கு மேற்படவில்லை என்றும் பிரிட்டிஷ் அரசின் மென்மையான நடைமுறைகளினால் இப்போது பல ஆயிரமாக அதிகரித்துள்ளது எனவும் அரசியல் வாதிகள் கருத்து தெரிவிக்கின்றார்கள்.

ஆபிரிக்கா ஆசியா, கிழக்கு ஐரோப்பா போன்ற நாடுகளில் இருந்து பெரும்பான்மையானவர்கள் இங்கு தஞ்சம் கோரி வருகின்றனர். இந்நாட்டில் கிடைக்கக்கூடிய பணம் , வீடு, கல்வி சுகாதார வசதி ஆகியவையே இவ்வகையான போலியான அகதிகளை வரத் தூண்டுகிறது என்று கூறிய கொன்சவேட்டிவ் கட்சி அமைச்சர்கள் இப்போது 90 வீதமாக வழங்கப்படும் பண உதவிகளை முற்றாக இல்லாமல் செய்ய அல்லது மிகவும் குறைந்தளவு வழங்க புதிய திட்டங்கள் வழி வகுக்கும் எனவும் பல மில்லியன் பவுண்களை வரிகட்டுவோர் பணத்தில் இருந்து சேமிக்கலாமென்றும் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பா சமூகத்தின் மற்றைய நாடுகளில் கடைப்பிடித்து வரும் போலி அகதிகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் வெற்றியடைந்து வருவதாகவும் கடந்த வருடத்தில் மிகவும் குறைந்தளவு அகதிகளே இந்நாட்டில் கூடுதலாக தஞ்சம் கோரி விண்ணப்பம் செய்துள்ளதாகவும் அறியப்படுகின்றது. இதே வேளை அந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது பிரிட்டனின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டும் அமைச்சர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்கள் எனவும் உள்நாட்டு விவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். இச்சட்டத்திற்கு எதிராக பல தேசிய அகதிகளுக்கு உதவி வழங்கும் அமைப்புக்கள் பல எதிர்ப்புக்களையும் கண்டனங்களையும் தெரிவித்துள்ளனர்.

### குடிவரவு தராதரத்தை சோதனை செய்யும் நடைமுறை.

இந்த நாட்டில் இலவச உதவிகளை வழங்கும்போது பெறுவோரின் குடிவரவு தராதரத்தை (Immigration status) சோதனை செய்யும் புதிய நடைமுறைபற்றி உள்நாட்டு விவகார செயலாளர் திரு மைக்கேல் ஹவாட் அறிவித்துள்ளார். இந்தப் புதிய விதிகள் நடைமுறைக்கு வரும்போது நலன்புரி பணஉதவிகள் , வீட்டு வசதிகள் , மாணவர் கடன் உதவிகள், சுகாதார வசதிகள் போன்றவற்றை வழங்கும் முன்பு விண்ணப்பக்காரர்கள் எவ்வகையான குடிவரவு தராதரம் உடையவர்கள் என்பதற்குரிய அத்தாட்சி பெறவேண்டும் என பணிப்புரை வழங்கப்படும். இந்த விதிமுறைகள் பாடசாலை மாணவர்கள் சேர்க்கும் போது கூட கைக்கொள்ளப்படுமென நம்பப்படுகின்றது. குடிவரவு செயலாளரினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நடைமுறைகள் பற்றி பிரிட்டன் அகதிகள் பணியக இயக்குனர் திரு அல்ப் டப்ஸ் கருத்து தெரிவிக்கையில் 1951 ஆண்டு ஜனீவாவில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு மாறாக பிரிட்டிஷ் அரசு புதிய நடிவடிக்கைகளை அகதிகளுக்கு எதிராக எடுக்கின்றது. பாடசாலை குழந்தைகளை சேர்ப்பதற்கும் அவர்களின் குடிவரவு தராதரத்தை பரிசீலிப்பது 1989ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட குழந்தைகள் சட்டமூலத்திற்கு முற்றிலும் முரணானது எனக் குறிப்பிட்ட அவர் இந்நாட்டில் உள்ள பெரும்பான்மையான திணைக்கள ஊழியர்கள் அகதிகளை பொறுத்தமட்டில் குடிவரவு அதிகாரிகளாக தங்களை நடத்தவேண்டுமென்ற பாணியில் புதிய நடைமுறைகள் கொண்டுவரப்படுகின்றன. இந்நாட்டிற்கு பாதுகாப்பிற்காக ஓடிவரும் அகதி தங்களுக்குரிய உரிமைகள் பாதுகாப்பு என்ன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்பனவற்றை அறிய முன்பே கிரிமினல் போன்று விரட்டப்படுகின்ற நிலைமையை இந்நாட்டு அரசு உருவாக்குகின்றது என்று குறிப்பிட்டார்.

**1993 ஜுலை புதிய சட்ட மூலம் கொண்டுவரப்பட்டபோது மேன்முறையீடு விண்ணப்பங்கள் 3600 – 1994 டிசம்பரில் 25000.**
**அப்பீல் முறையை இல்லாமல் செய்ய இந்த ஆண்டு வரும் புதிய சட்டமூலங்கள்.**

பல்வேறு நாடுகளில் இருந்து தஞ்சம்கோரி விண்ணப்பம் செய்யப்பட்டு பரிசீலனைக்காக காத்து உள்நாட்டு குரவரவு காரியாலயத்தில் 1992ஆம் ஆண்டு வரை தேங்கிக் கிடந்த விண்ணப்பங்கள் சுமார் 65,000 யாகும். (Fast Track)துரித பரிசீலனை என்ற நடவடிக்கைக்காக அவசர அவசரமாக 500 க்கு மேற்பட்ட புதிய குடிவரவு உத்தியோகத்தர்கள் தஞ்சம் வழங்கும் பகுதிக்கு நியமிக்கப்பட்டார்கள். இரண்டு வருட காலத்தில் இவை பரிசீலனை செய்யப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. நியாயமான முறையில் அடைக்கலம் வழங்குவதை உறுதி செய்வதற்கென கொண்டு வரப்பட்ட தஞ்சம் கோரும் மேன்முறையீடு சட்டத்தின் பலாபலனாக இப்போது உள்நாட்டு செயலாளர் "கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதை" போன்று ஆகிவிட்டதே என்று திண்டாடுகின்றார். ஆளும் கொன்சவேட்டிவ் கட்சியின் உட்பக்க உறுப்பினர்களில் பல்வேறு உந்தல்களும் விமர்சனங்களும் ஐரோப்பிய சமூக நட்பு நாடுகளின் வேண்டுகோளுக்கு மதிப்பளிக்கும் தன்மையையும் இனவாதம் ஒன்றினாலேயே அடுத்தபதவிக்காலத்தில் கைப்பிடிக்கலாம் என்று நம்புகின்ற அரசு இந்த ஆண்டு கடைசிப்பகுதியில் தஞ்சம்கோரி குடிவருபவர்கள் சம்பந்தமாக புதிய சட்ட மூலங்களை கொண்டு வர முன்னறிவித்தல் கொடுத்துள்ளது.

இந்நாட்டிற்குள் தஞ்சம்கோரி விண்ணப்பம் செய்கின்ற சகலருக்கும் தங்கள் கோரிக்கை சம்பந்தமாக மேன்முறையீடு செய்யும் சந்தர்ப்பத்தை கடந்த 1993 ஜுலை மாதம் கொண்டு வரப்பட்ட சட்டமூலத்தின் மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்டது. அதன் முன்பு சட்ட பூர்வமான விசா ஒன்றின் மூலம் ஐக்கிய ராட்சியத்திற்குள் நுழைந்து பின்பு தஞ்சம் கோரியவர்களுக்கு மாத்திரமே மேன்முறையீடு செய்யும் உரிமை வழங்கப்பட்டு இருந்தது. இப்போது நடைமுறையில் உள்ள சட்ட மூலங்களின் உதவியுடன் உள்நாட்டு அலுவலகத்தின் முடிவு தஞ்சம் கோரியவர்களைப் பாதிக்குமானால் அம்முடிவுக்கு எதிராக மேன்முறையீடு செய்ய முடியும். இம்முறையீடுகள் உள்நாட்டு குடிவரவு பகுதிக்குள் உள்ளேயும் ஐக்கிய ராட்சியத்தின் நீதிமன்றத்திலும் மட்டுமன்றி பிரபுக்கள் சபை ஐரோப்பிய மனித உரிமைகள் மன்றுக்கும் மேன்முறையீடு செய்யக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. இப்போது முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ள புதிய சட்ட மூலம் உள்நாட்டு அலுவல்கள் அதிகாரிகள் மட்டத்திலேயே மேன்முறையீடு செய்யும்' உரிமையை மட்டும் வழங்கும். அதுவும் மேன்முறையீடு எழுத்து மூலமாக மாத்திரம் இருக்கும். விசாரணை ஒன்றின் மூலம் பாதிக்கப்பட்டவரின் வாய்மூல முறைப்பாடுகளை கேட்கும் உரிமையை கொண்டதாக இருக்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச்சட்டமூலம் கொண்டுவரப்படும் பட்சத்தில் ஏராளமான தமிழ் தஞ்சம்கோரும் விண்ணப்பதாரர்கள் தங்கள் கோரிக்கையின் நியாயத்தை இந்நாட்டு நீதிமன்றங்களில் எடுத்துக்காட்டக்கூடிய சந்தர்ப்பத்தை இழந்துவிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த சட்டமூலத்தில் குடிவரவு அதிகாரிகளின் முடிவுகளே இறுதியானவையாக இருக்குமெனவும் நம்பப்படுகின்றது.

---

**"மனிதாபிமான அடிப்படையில் கட்டாயப்படுத்தி திருப்பி அனுப்பமுடியாதென்ற காரணத்தினாலேயே ELR வழங்கப்படுகின்றது. ஆனால் தனிப்பட்டவர்களின் தகுதி அடிப்படையிலேயே நீடிக்கப்படும்.""**

**ELR நீடித்தல் கொள்கை தொடர்பாக தமிழ் அகதி நிலையத்திற்கு உள்நாட்டு அலுவல் அதிகாரி கடிதம்!**

கடந்த சில மாதங்களாக ஏற்கனவே ELR வழங்கப்பட்ட பல தமிழ் அகதிகளின் விடயத்தில் குடிவரவு உத்தியோகத்தர்கள் கடைப்பிடித்து வந்த நடைமுறைகள் இங்கு வாழ்கின்ற ஆயிரக்கணக்கானவர்களின் தொடர்ச்சியான தங்களது இருப்பிட எதிர்பார்ப்புகளுக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்திக் கொண்டு வருகின்றது. ஐக்கிய நாடுளின் 1951 ஆண்டு அகதிகள் சாசனத்தின் வலைவிலக்கணத்திற்கு உட்படாதவர்கள் என்று கருதப்பட்ட சுமார் 15 ஆயிரம் தமிழ் அகதிகளின் தஞ்சக்கோரிக்கை அகதி அந்தஸ்து பெறுவதற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தகுதியற்றவையென நிராகரிக்கப்பட்டாலும் மனிதாபிமான அடிப்படையில் அவர்களை கட்டாயப்படுத்தி இலங்கைக்கு திருப்பியனுப்பக்கூடிய சூழ்நிலை இல்லை என்ற காரணத்தினால் குரவரவு விதிகளுக்கு புறம்பான வகையில் இருப்பிட அனுமதி வழங்கப்பட்டு இருக்கின்றது. உள்நாட்டு குடிவரவு காரியாலயத்தின் இந்த அனுமதி சாதாரணமாக முதலாவது தரத்தில் ஒரு வருட அனுமதியும் அதன் பின்பு இரண்டு தடவைகளில் மூன்றுவருட அனுமதியும் வழங்கப்பட்டு ஏழாவது வருட முடிவில் காலவரையறை இருப்பிட அனுமதிக்கு விண்ணப்பம் செய்ய வழிசெய்கின்றது.

இந்த சாதாரண வழக்கு அடிப்படையில் கடந்த காலங்களில் எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இன்றி நீடிக்கப்பட்டுவந்தன. ஆனால் கடந்த ஜனவரி மாதத்தின் பின் விண்ணப்பம் செய்த பலருக்கு மேற்கூறப்பட்ட சாதாரண வழக்கத்திற்கு மாறாக ஒன்று தொடக்கம் ஆறுமாதம் வரையிலான இருப்பிட அனுமதி வழங்கப்பட்டு அதன்பின்பு நீடிப்பதற்கு விண்ணப்பிக்க முடியும் என்ற ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வந்தன. இந்த நடைமுறைக்கும் இலங்கையில் இடம் பெற்று வந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கும் தொடர்பு இருப்பது போல் கருதப்பட்டாலும் அது பற்றி உள்நாட்டு அதிகாரிகள் வெளிப்படையாக தெரிவிக்க மறுக்கின்றார்கள். ஈ எல் ஆர் வழங்கப்பட்ட ஆயிரக்கணக்கான தனிப்பட்டவர்கள், குடும்பத்தவர்கள் தங்கள் வாழ்க்கையை இந்த நாட்டில் ஸ்திரப்படுத்துவதற்குரிய பல்வேறு வகையான வாழ்க்கை முறைகளில் தங்களை ஆக்கிக் கொண்டார்கள். வர்த்தகம், சொந்த தொழில் முயற்சிகள் முதலீடு கல்வி வீடுகளை சொந்தமாக கொள்வனவு செய்து கொண்ட ஏராளமானவர்களுக்கு தமது எதிர்காலத்தில் ஒரு நிட்சயம் அற்ற தன்மையை உள்நாட்டு அதிகாரிகள் காட்டத்தொடங்கியது அச்சத்தை ஏற்படுத்தியது.

இதன் காரணமாக தமிழ் அகதிகளுக்கு **ELR** வழங்கலில் உள்நாட்டு அலுவலகம் கடைப்பிடிக்கும் கொள்கையை வெளிப்படுத்துமாறு .வடஇலண்டன் எட்மன்டனில் அமைந்துள்ள தமிழ் அகதிகள் நிலையத்தின் (TRC) தலைவர் திரு எஸ் கணேசானந்தன் அவர்கள் குடிவரவு அதிகாரிகளுக்குக் கடிதமொன்றை எழுதினார். கடந்த மார்ச் மாதம் 14ஆம் திகதி எழுதப்பட்ட இக்கடிதத்திற்கு மேற்கண்டவாறு பதில் எழுதப்பட்டுள்ளது. இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள தனிப்பட்டவர்கள் தகுதி என்ற பதம் உள்நாட்டு அதிகாரிகளினால் எப்படிவேண்டுமானாலும் விளக்கத்தை கொண்டிருக்கலாமென தமிழ் அகதி நிலைய இணைப்பாளர் திரு எஸ் தங்கராசா தெரிவித்தார். ஏற்கனவே ஈ எல் ஆர் வழங்கப்பட்டவர்களில் 100 வீதமானோருக்கு நிரந்தர இருப்பிட அனுமதியை பெறுவதற்கு இன்னும் 6–7 வருடங்கள் வரை செல்லலாம். இந்தக் காலத்தில் தனிப்பட்டவர்கள் தகுதியை அதிகாரிகளுக்கு இந்த நாட்டில் தொடர்ந்து வழங்குவதற்கு தகுதி யானவர்கள் என்று நிரூபிக்க வேண்டிய தருணம் வரும் என்றும் அதற்கேற்ப தங்களை..... வகுத்துக் கொள்ள வேண்டுமென்றும அவர் மேலும் தெரிவித்தார். இது தொடர்பாக அகதி மூலம் எந்தவிதமான ஆலோசனையை கூறமுடியுமென்று கேட்டபோது முக்கியமாக தொடர்ச்சியாக வலிமையான காரணமின்றி அரசின் எந்தவித பணஉதவிகளிலும் தங்கியிருக்காமல் இந்த நாட்டிற்கு வரிகட்டும் பிரஜையாக மாற முயற்சிக்க வேண்டும். இது மிகவும் முக்கியமானது. உள்நாட்டு அலுவலகத்தினால் எமக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் ஈ எல் ஆர் வழங்குவது ஒரு பொதுவாக கொள்கை இல்லை என்றும் ஒவ்வொருவருடைய விண்ணப்பமும் தனிப்பட்ட முறையில் பரிசீலனை செய்யப்பட்டு அதற்கு ஏற்ப முடிவு எடுப்பதுதான் தங்களது ஈ எல் ஆர் கொள்கை என மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் மிகவும் பாரதூரமானது என்று தெரிவித்தார்கள். இருப்பிட அனுமதி புதுப்பிக்க விண்ணப்பங்களை செய்யும்போது ஆலோசனைகள் தேவையாயின் தமிழ் அகதிகள் நிலையத்துடன் தொடர்புகொள்ளும்படியும் கேட்டுக்கொண்டார்.

**அடுத்த அகதி 18 இல்....**

**சட்டத்தரணி திரு எஸ். பரமலிங்கம் அவர்களுடன் ஒரு சந்திப்பு**

**சன்றைஸ் வானொலிபற்றிய வாசகர்கள் கருத்து**

**ஜீவன் எழுதும் "தமிழிச்சி" நெடுங்கதை**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுத்தமாகவும்
சுவையாகவும்
தரமாகவும்
தயாரிக்கப்பட்ட
உணவு வகைகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய
ஒரே இடம்

# பாரதி விலாஸ்

# BARATHY VILLAS

**SRI LANKAN, SOUTH INDIAN**
**RESTAURANT & TAKE AWAY**

ஓடர்களுக்கு உணவு விநியோகம்
செய்யப்படும்

**TEL:0181 521 3011**

**134 HOE STREET**
**WALTHAMSTOW**
**LONDON**
**E17 4QR**

OPEN
NOON TO MIDNIGHT
SEVEN DAYS A WEEK



*With Best Compliments*
*From*

# YOGA & CO

## SOLICITORS

*ADMINISTRATORS OF OATHS*

**T.Yoganathar**
**&**
**S. Yogarajah**

**47, Booth Road,Colindale,London NW9 5JS**
**Tel : 0181 205 0899 Fax : 0181 200 5797**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பத்து ஆண்டுகளை நிறைவு செய்யும் தென் இலண்டன் தமிழர் நலன் நிறை அமைப்பு

**(South London Tamil Welfare Group)**

1985 ஆம் ஆண்டு ஜுன் மாதம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட தென் இலண்டன் தமிழர் நலன் நிறை அமைப்பு கடந்த பத்து வருடங்களாக தமிழர்களின் நலன்களில் அக்கறை கொண்டு ஆற்றிய கடமைகள் பணிகள் சேவைகள் என்பனவற்றை இவ்வேளையில் நினைவு கூருவது மிகப் பொருத்தமானதாகும்.

இன அடிப்படையில் இலங்கைத் தமிழினம் ஒடுக்கப்பட்டு ,துன்புறுத்தப்பட்டு சொந்தம் பந்தம், உற்றார் உடமைகளை இழந்து நாடு நாடாக புலம்பெயர்ந்து பிரித்தானியாவுக்கும் வந்து சேர்ந்தபோது -பாதுகாப்பான நாடு ஒன்றிற்கு வந்துவிட்டோம் என்ற திருப்தி இருந்தாலும் புதிய நாடு , புதிய சூழல், புதிய கலாச்சாரம் என்பனவற்றின் தாக்கங்களை எதிர்நோக்கியவர்களுக்கு -கைகொடுத்து உதவி புதிய நண்பர்களைச் சேர்க்க தேவைப்பட்ட சேவையின் அடிப்படையில் தென் இலண்டன் நலன் நிறைவு அமைப்பு உதயமானது.

தனிப்பட்ட ரீதியில் சமூகப்பணிபுரிய முன்வந்த பலரை ஒன்று சேர்த்த இவ்வமைப்பு எவ்விதமான பிரதிபலனையும் எதிர்பாராது தமிழ் அகதிகளுக்கு தேவையான குடிவரவு ஆலோசனை ஆக்க முயற்சிகள் இருப்பிடம் சுகாதாரம் கல்வி போன்ற முக்கிய தேவைகளில் அரச தனிப்பட்ட நிறுவனங்களின் ஊடாக கிடைக கக்கூடியவற்றை கிடைக்கச் செய்வதில் இவ்வமைப்பு முதலில் ஈடுபட்டது. தெற்கு லண்டன் மேட்டன் உள்ளூராட்சி ஒன்றியம் இவ்வமைப்பின் சேவைகளை உணர்ந்துமதித்து காரியாலயம் ஒன்றை அமைப்பதற்கான இடவசதியை விம்பிள்டன் குயீன் ரோட்டில் உள்ள கட்டிடம் ஒன்றில் கொடுத்து உதவியது. தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு பின்பு விம்பிள்டன் ஹேட்பீல் ரோட்டில் அமைந்துள்ள விசாலமான சகல வசதிகளும் பொருந்திய காரியாலயம் ஒன்றை இவ்வமைப்பு பெற்றுக்கொண்டது, இதன் சேவைகளுக்கு மகுடம் வைத்தாற் போன்றதாகும் . தெற்கு லண்டனில் இருந்து மட்டுமல்லாது நாட்டின் மற்றைய பாகங்களில் இருந்தும் தமிழர்கள் இவ்வமைப்பின் சேவையை நாடி வருகின்றனர். விசேடமாக தமிழ் அகதிகளின் நலன்களில் அக்கறை கொண்டு சேவை செய்யும் இவ்வமைப்பு கடந்த வருடம் சுமார் 500 க்கும் மேற்பட்டவர்களில் பல்வேறு தேவைகளை பரிசீலனை செய்து பூர்த்தி செய்யும் சேவையை ஆற்றியுள்ளது. தெற்கு லண்டனில் மேட்டன் , வொன்வேத் ,கிங்ஸ்டன், குறைடொன் போன்ற உள்ளூராட்சி பகுதிகளில் வாழும் பெரும்பான்மைத் தமிழ் மக்கள் இவ்வமைப்பின் தேவையை நாடி வருகின்றார்கள். தமிழர்களின் நாளாந்த பிரச்சனைகளை கவனத்தில் எடுத்து அதற்கு பரிகாரம் தேடும் இவ்வமைப்பு அவர்களின் மொழி , கலாச்சாரம் , பாரம்பரியம், என்பனவற்றை இந்த நாட்டிலும் பேணிக்காத்து பொங்கல் விழா தமிழர் புதுவருட விழா, நவராத்திரி விழா , கிறிஸ்மஸ் பண்டிகை தினம், என்பனவற்றையும் வருடாவருடம் சிறப்பாக கொண்டாடுகின்றனர்.

வீடுகளில் முடங்கிவிடும் முதியோர்களுக்கான சந்திப்பு நிலையம் ஒன்றை லண்டன் மாநகரில் முதன்முதலில் ஆரம்பித்த பெருமை இவ்வமைப்பிற்கே உரியது. சனிக்கிழமைகளில் மாதம் இருமுறை இடம்பெறும் இச்சந்திப்பு நிலையத்தில் லண்டனின் பல பாகங்களிலும் இருந்தும் தமிழ் முதியவர்கள் வந்து கலந்துகொள்கின்றார்கள். தற்போது விம்பிள்டன் யோன்இன்ஸ் யூத் நிலையத்தில் நடைபெறும் சந்திப்பின்போது முதலில் சூடான கோப்பி தேநீருடன் வரவேற்கப்படுகின்றார்கள். முதியோர்கள் அறிந்துகொள்ளவேண்டிய பல்வேறு விடயங்கள் பற்றி சம்பந்தப்பட்டவர்களைக் கொண்டு சிறு உரைகள் , கலந்துரையாடல்கள் என்பனவற்றை அவ்வப்போது நடாத்தி பல பயனுள்ள தகவல்களை கிடைக்கச் சந்தர்ப்பத்தை அளிக்கின்றார்கள். அறுசுவையுடன் கூடிய சைவமதிய போசனத்துடன் இந்த சந்திப்பில் கலந்துகொள்பவர்கள் அடிக்கடி வெளியுலா சென்று வருவதற்கு உரிய சந்தர்ப்பத்தையும் பெறுகின்றார்கள்.

பாடசாலை மாணவர்களுக்கான பிரதி சனிக் கிழமைகளில் இடம்பெறும் உதவி வகுப்புக்கள் இப்பகுதி மாணவர்களை பெரிதும் கவர்ந்திருக்கின்றது. இவ்வமைப்பில் பொதுச்சேவை புரியும் பல பயிற்றப்பட்ட ஆசிரியர்களினால் பொதுத் தராதர சாதாரண உயர்தர பரீட்சைகளுக்குத் தோன்றும் மாணவர்களுக்கான விஞ்ஞானபாடங்கள் இங்கு புகட்டப்படுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



.இவற்றை விட இவ்வமைப்பு பெண்கள் மகளிர் முன்னணி ஒன்றையும் அமைத்து பெண்களுக்கான பலவித செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை ஜுன்மாதம் 24ஆம் திகதி மேட்டன் நகர மண்டபத்தில் கொண்டாடும் சந்தர்ப்பத்தில் இவ்வமைப்பின் ஆரம்ப கர்த்தாவாகவும் ,அதன் வளர்ச்சியில் நீண்ட காலம் தன்னை ஈடுபடுத்தி நற்பணிபுரிந்த காலஞ் சென்ற திரு எஸ் டீ பாலராஜா அவர்களை இப்போது நினைவு கூர்வது "அகதியின்" கடமையாகும்.

# என்பீல்ட் கல்வி பயிற்சி நிலையம்

## Enfield Education & Training Centre

வட இலண்டன் என்மண்டனில் அமைந்துள்ள தமிழ் அகதிகள் நிலையம் கடந்த ஜனவரி மாதம் 11ஆம் திகதி என்பீல்ட் கல்வி பயிற்சி நிலையமொன்றை திறந்துவைத்தனர். 1992ஆம் ஆண்டு மார்ச் மாதம் எட்மண்டன் பிரதான பாதையில் தமிழ் வர்த்தகர் திரு பீ தியாகராசா அவர்களினால் கொடுத்துதவிய அறையொன்றில் தமிழ் அகதி நிலையம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அன்றைய நாட்களில் முதல் இச்சங்கத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு பணியாற்றிய சில சமூகப் பணிபுரியும் தொண்டர்களின் நீண்ட உழைப்பின் பின் தமிழ் அகதி நிலையத்திற்கு சகல வசதிகளும் கொண்ட காரியாலயம் ஒன்றை என்பீல்ட் உள்ளூராட்சி ஒன்றியம் 1993 பெப்ரவரியில் கொடுத்துதவியது.

வட இலண்டனில் மாத்திரமன்றி லண்டனின் பால பாகங்களில் இருந்தும் தமிழ் அகதி நிலையத்தின் தேவையைப் பெற்று வந்த தமிழ் அகதிகளின் கல்வி பயிற்சி தேவைகளை பூர்த்தி செய்வதில் இந்நிலையம் பல்வகையான ஆக்க முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டு வந்தது. இலவசமான முதியோர்களுக்கான ஆங்கில வகுப்புகளை முதலில் நடாத்தி வந்த தமிழ் அகதி நிலையத்தினர் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான ஆங்கிலம் புகட்டும் வகுப்பொன்றை ஆரம்பித்தது. கால்டன் தொலைக்காட்சி நிறுவனத்தினர் இவ்வகுப்புக்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான ஊதியத்திற்கான பணஉதவியை வழங்குகின்றனர். ஆங்கிலத்துடன் விஞ்ஞானம் கணிதம் போன்ற பாடங்களும் இங்கு புகட்டப்படுகின்றத. இதற்குரிய கட்டணத்தினை பெற்றோர்கள் அன்பளிப்பாக வழங்குகின்றனர். இவ்வகுப்புக்களில் சேர்வதற்கான மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவே புதிய இடமொன்றை தேடுவதற்கு தமிழ் அகதி நிலையத்தினர் கட்டாயமாகத் தள்ளப்பட்டனர். இதைத் தொடர்ந்து என்பீல்ட் கல்வி பயிற்சி நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிலையத்திற்குரிய வாடகை, மற்றும் தேவையான வசதிகளை என்பீல்ட் உள்ளூராட்சி ஒன்றியமேகொடுத்து உதவுகின்றது. என்பீல்ட் பகுதியில் வாழுகின்ற தமிழ் அகதிகளின் பிரச்சனையில் உள்ளூராட்சி ஒன்றியம் காட்டுகின்ற அக்கறையும் கரிசனையையும் இவ்வுதவி மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது. எட்மண்டன் கிறீன் பொதுவர்த்தக நிலையக் கட்டிடத்தின் மேல் மாடியில் பல அறைகளைக் கொண்ட இக்கட்டிடத்திற்கு பாக்கிளேஸ் வங்கி தேவையான சகல தளபாட உதவிகளையும் வழங்கியுள்ளது. 120 பாடசாலை மாணவர்கள் பயிலும் உதவி வகுப்புக்கள் பிரதி சனிக்கிழமைகளில் காலை 10 மணிமுதல் மாலை 6. 30 வரை இடம்பெறுகின்றது. மேலும் மாணவர்கள் இவ்வகுப்புக்களில் இடம் பெறுவதற்கு காத்து இருப்பதாகவும் அறியப்படுகின்றது. வட இலண்டனின் பெரும்பாலும் சிறபான்மையின மாணவர்களிடம் பிரபல்யம் வாய்ந்த இந்த வகுப்புகளினால் தங்களின் குழந்தைகள் பாடசாலைகளில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றார்கள் என்று பெற்றோர்களினால் கூறப்படுகின்றது.

வயது வந்தவர்களுக்கான அடிப்படை கொம்பியூட்டர் வகுப்புக்களை கடந்த மே மாதம் முதல் ஆரம்பித்துள்ளார்கள். பல உதவி வழங்கும் ஸ்தாபனங்களில் வழங்கப்பட்ட பத்து கொம்பியூட்டர்கள் இப்போது இப்பயிற்சியில் பாவிக்கப்படுவதாயும் இவ்வகுப்புக்களில் சேர்ந்து பயில மேலும் பலர் விருப்பம் தெரிவித்துள்ளதாக அறியப்படுகின்றது.

வட இலண்டன் தொழிற்பயிற்சி நிறுவனம் (நோத்டெக்)புதிய தொழிற்பயிற்சி நெறிகளை ஆரம்பித்து நடாத்துவதற்குரிய பண உதவியை இப்போது செய்துள்ளதாகவும் இப்புதிய பயிற்சி நெறிகள் ஜுலை நடுப்பகுதியில் ஆரம்பிக்கும் எனவும் நிலையத்தின் முகாமையாளர் திரு கனகசூரியம் அகதிக்கு தெரிவித்தார். இந்நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தராதரப்பத்திரங்களைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருப்பிடத்தையும் 16-25க்கு இடைப்பட்ட குறைந்தது 6 மாத காலத்திற்காவது வேலையற்றவர்களாகவும் இருக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார். கணிதம், ஆங்கிலம்,என்பவற்றில் அடிப்படை அறிவைக் கொடுத்து மேலும் தங்களது மேல் படிப்பிற்கோ அல்லது தொழில் வாய்ப்பை ஏற்படுத்தக் கூடிய பாடநெறியொன்றும் இந்நிலையத்தில் ஆரம்பிக்கப்படும். 6 மாதத்துக்கு மேற்படாதவாறு இப்பயிற்சிகள் நடாத்தப்படும் எனவும் கல்வி சாதாரண உயர்தர வகுப்புக்களிலும் கணக்கியல் பாடநெறிகளில் பயிலும் மாணவர்களுக்கும் பாடசாலைக்கட்டணம் போக்குவரத்து கட்டணம் என்பனவற்றையும் கொடுத்துதவ இந்நிலையம் முன்வந்துள்ளதாக அவர்மேலும் தெரிவித்தார்.

# தமிழ் அகதிகள் நடவடிக்கைக் குழு (TRAG)

### தஞ்சம் கோரும் தமிழர்களுக்கு தரும் ஒரு முக்கிய குறிப்பு

தமிழ் அகதி விண்ணப்பதாரர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கான முயற்சியில் பிரித்தானிய அரசின் உள்நாட்டு அலுவலகம் தற்பொழுது தீவிரமாக வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. 1993ஆம் ஆண்டு ஆடி மாதம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட அகதி அந்தஸ்து மேன்முறையீடு சம்பந்தப்பட்ட சட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்படும் அகதி விண்ணப்பங்கள் யாவுமே உள்நாட்டு அலுவலகத்தினால் நிராகரிக்கப்படுகின்றன. தவிர்க்கமுடியாததும் இரக்கத்திற்குரியதுமான சூழ்நிலைகளை உடைய விண்ணப்பதாரர்கள் மட்டும் இதற்கு விதிவிலக்காய் அமைந்து விசேட அனுமதியை பெறக்கூடும். ஆனால் நடைமுறையில் இவ்வகைச் சூழ்நிலைகளை நிரூபிப்பது மிகவும் கடினமானது என்பதை உள்நாட்டு அலுவலகத்துடன் தொடர்பு கொள்பவர்கள் அறிவர்.

உள்நாட்டு அலுவலகம் சென்ற ஆண்டு பங்குனி மாதத்திலிருந்தே தமிழ் அகதி விண்ணப்பதாரர்களுக்கு அதுவரை கொடுத்து வந்த விசேட அனுமதியை வழங்காது நிறுத்திவிட்டது. தமிழ் அகதிகள் நடவடிக்கைக்குழுப்பிரதிநிதிகள் உள்நாட்டு அலுவலக உயர் அதிகாரிகள் இருவரை சந்தித்து உரையாடியபோது தமிழ் அகதி விண்ணப்பதாரர்கள் பொருளாதாரக் காரணங்களுக்காகவே பிரித்தானியாவிற்கு வருவதாக கூறினார்கள். இதனை மறுத்து குழுவின் பிரதிநிதிகள் விவாதித்தபோதும் அவ்வதிகாரிகள் தமது நிலைமினை மாற்றும் போக்கினைக் காணக் கூடியதாக இருக்கவில்லை இப்படியான ஒருநிலைப்பாட்டினையே தமிழ் சட்ட அறிஞர்கள் சங்கத்தினர் உள்நாட்டு அலுவலர்கள் சந்திப்பின் போதும் காணக்கூடியதாக இருந்ததாகக் கூறினார்கள். இவ்வாறு உள்நாட்டு அலுவலகம் விசேட அனுமதியைத் திடீரென வழங்காது விட்டதற்கு அடிப்படையாக இருக்கும் காரணங்கள் எவையெனப் பார்ப்பது இங்கு அவசியமாகின்றது. தமிழ் அகதி விண்ணப்பதாரர்களுக்குத் தற்போது கொடுக்கப்படும் தமது நிராகரிப்பிற்கான காரணங்கள் அடங்கிய கடிதங்களில் பின்வரும் காரணங்கள் உள்நாட்டு அலுவலகத்தால் தரப்படுகின்றன.

1.சட்டத்திற்கு கட்டுப்பட்டு வாழும் தனது பிரஜையை - அவர் தமிழ் இனத்தவரோ இல்லையோ-பாதுகாப்பதற்கான நல்லெண்ணத்தை இலங்கை அரசாங்கம் கொண்டுள்ளது. ஒழுங்கீனம் முன்பு நிலவியபோதும் அதனை கட்டுப்படுத்த இலங்கை அரசாங்கம் பலவித நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இதனுள் சமூக அரசியல் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளும் அடங்கும். எனவே தமிழரோ அன்றி வேறொருவரோ 1951ஆம் ஆண்டு ஏற்பட்ட அகதிகளின் அந்தஸ்து பற்றிய பேராயத்தின் கீழ் தனது இனம் இனவழிப்பிற்குள்ளானது என்ற வகையில் அகதி அந்தஸ்து கோர அருகதையற்றவராவர்.

2. இலங்கை அரசின் பாதுகாப்புப்படையினர் முக்கியமாக 1988-1990 ஆண்டிற்கிடையில் நிகழ்த்திய மனித உரிமை மீறல்களை உள்நாட்டு அலுவலகத்தினர் அறிவர். ஆனால் இலங்கை அரசானது தற்பொழுது இவ்வகையான மீறல்களில் ஈடுபடாவண்ணம் பாதுகாப்புப்படையினரை கட்டுப்படுத்தி உள்ளதோடு மீறியோருக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுத்துள்ளது மேலும் சுதந்திரமான மனித உரிமை ஆணைக்குழு ஒன்றையும் இலங்கை அரசு நியமித்துள்ளது. இவ்வாணைக்குழுவிடமிருந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளோரைப் பற்றிய விபரங்களை மக்கள் பெற்றுக்கொள்ளலாம். தடுத்து வைக்கப்பட்டு ள்ளோருக்கு சட்ட உதவிகளையும் அக்குழு வழங்குகின்றது.

3. தடுத்து வைக்கப்பட்டுள்ளோர்களை மீளக்குடியமர்தல். மறுவாழ்வளித்தல் ஆகியவற்றிற்கான சபை மூலம் இலங்கை அரசானது தடுத்து வைக்கப்பட்டுள்ளோர்களில் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடாதவர்களைத் தேர்ந்தெடுத்து விடுதலை செய்கின்றது.

4. செஞ்சிலுவைச்சங்கத்தின் அனைத்துலகக் குழு காணாமற் போனோர் பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைக்குழு சர்வதேச மன்னிப்புச்சபை ஆகிய தாபனங்கள் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொலிஸ் மற்றும் ஆயுதப்படையினரிடையே ஒழுங்கு பொறுப்புத்தன்மை சம்பந்தப்பட்ட புதிய உணர்வினை அறிமுகப்படுத்தக்கூடியதாயுள்ளது. மேலும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உயர் தானிகருக்கும் தனது பூரண ஒத்துழைப்பை இலங்கை அரசு வழங்குகின்றது.

5. இலங்கை அரசானது மனித உரிமை சம்பந்தப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து நிறுவனங்களுடன ஒத்துழைத்து வருகின்றத.

6. இலங்கையின் வடகிழக்கு பகுதிகளிலேயே மோதல் இடம்பெறுகின்றது. நாட்டின் ஏனைய பகுதிகளில் சாதாரண நிலைமையே காணப்படுகின்றத. 1989ஆம் ஆண்டிலிருந்து நாட்டின் நிலைமையைத் தொகுத்து நோக்கும்போது பொதுப்படையாக முன்னேற்றமே தென்படுகின்றது .

7. இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டவர்கள் அரசின் உபத்திரபத்திற்கன்றி அரசினால் இடைஞ்சலுக்கு உள்ளாக்கப்பட்டதாக அறியப்படவில்லை.

8. கொழும்பில் பொலிசாரினால் தமிழ் இளைஞர்கள் பெருமளவில் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டும் தடுத்து வைக்கப்பட்டும் வருகின்றனர். ஆனால் நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைக் கண்டுபிடிக்கவும் இவ்வகை விசாரணையும் தடுத்து வைத்தலும் இலங்கை அரசினால் எடுக்கப்படுவது தவிர்க்க முடியாததே. ஐக்கிய நாடுகளின் பேராயத்தின் கீழ் ஆக்கினை அடக்குமுறையாகக் கணிக்கமுடியாது.

9. கொழும்பிலும் வடகிழக்குத் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் பெருந்தொகையான தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்கள் சிங்களவர்களினால் உபத்திரப்படுத்தப்படவில்லை. பகைமைப்படுத்தப்படவுமில்லை. 1983ஆம் ஆண்டின்பின் குறிப்பிடத்தக்க இனக்கலவரமும் நிகழவில்லை. அப்படியொரு நிலை ஏற்படாதிருக்க இலங்கை அரசு தன்னாலானவற்றைச் செய்கின்றது. தமிழர்களுக்கெதிரான பாகுபாடும் இப்பொழுது இல்லாததோடு பல தமிழர்கள் வியாபாரத்துறையிலும் முன்னணியில் உள்ளனர். இந்நிலையில் இலங்கையின் தென்பகுதி தமிழர்கள் வாழ்வதற்கு பாதுகாப்பான பிரதேசமாகும்.

10.மாற்று இயக்கங்களினால் தமது உயிருக்கு ஆபத்து எனக்கூறப்படுவதும் ஐக்கிய நாடுகளின் பேராயத்தின் கீழ் அகதியாக கணிக்கப்படுவதற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இலங்கை அரசானது இவ்வியக்கங்களின் செயல்களைத் தெரிந்திருந்தும் பொறுத்துக்கொண்டிருக்கின்றது அல்லது அவ்வகைச் செயல்களில் இருந்து விண்ணப்பதாரரைக் காப்பாற்ற இயலாத நிலையில் இலங்கை அரசு இருந்தது என நிரூபிப்பதன் மூலமே பேராயத்தின் கீழ் வரமுடியும்.

11.சுவிற்சலாந்து ஒல்லாந்து பிரான்ஸ் ஜேர்மனி ஆகிய நாடுகளும் அகதி விண்ணப்பதாரர்களை திருப்பி அனுப்ப எண்ணுகின்றது. இன்னும் பல காரணங்களை உள்நாட்டு அலுவலகம் கூறிக்கொண்டே போகிறது. இந்நிலையில் அகதி விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பத்தினை உள்நாட்டு அலுவலகம் நிராகரிக்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகளில் உடனடியாக ஈடுபடுதல் அத்தியாவசியமாகின்றது. உண்மையில் அகதி விண்ணப்பம் கோரிய நாளிலிருந்தே அக்கறைகொண்டு தகுந்த நடவடிக்கைகள் எடுத்திருப்பின் மேல் விசாரணைகளுக்கு விண்ணப்பதாரர் போகும்போது தமது வழக்கினை வெல்லக்கூடிய சாத்தியம் அமையும்.

இத்தகுந்த நடவடிக்கைகள் என்பது இருவகையில் அமையலாம். முதலாவது முன் குறிப்பிட்ட நிராகரிப்பிற்கான காரணங்களுக்கு எதிராக தத்தமது விண்ணப்பத்தினை நியாயப்படுத்தக்கூடிய சபையில் தயார்ப்படுத்தல், கூடவே அதற்கான ஆவணங்களையும் பெறுதல்,(பொய்யான ஆவணங்களைச் சமர்ப்பிப்பதாக உள்நாட்டு அலுவலகம் தமது நிராகரிப்புக் காரணங்களுள் ஒன்றாகக் குறிப்பிடுவதை இங்கு அவதானத்திற்கு எடுத்தல் வேண்டும்.)தனது உயிருக்கு ஆபத்து ஏற்படுவதற்குரிய காரணங்கள் அனைத்தையும் விபரமாகத்தெரிந்து கொள்ளல். இலங்கையில் அண்மைக்காலம் வரை இடம்பெற்று வந்த மனித உரிமை மீறல்கள், அரசியற் சம்பவங்கள் என்பவற்றை அறிந்திருத்தல். மேற்குறிப்பிட்ட அனைத்தையும் பற்றி உள்நாட்டு அலுவலகத்திற்கு அல்லது குடிவரவு அதிகாரிக்கு உரிய முறையில் சமர்ப்பித்தல்.

அடுத்து பிரச்சார வேலைகள் மூலம் பிரித்தானிய அரசைத் தனது கொள்கையை மாற்றும்படி செய்யவைப்பது. இது பலரும் ஒருமித்து எடுக்கவேண்டிய நடவடிக்கையாகும். மற்றவர்கள் செய்வார்கள். நாம் பேசாதிருப்போம் என்றிராது எல்லா விண்ணப்பதாரர்களும் ஒன்று சேர்ந்து உடனடியாகச் செயற்படவேண்டும்.

விண்ணப்பம் ஒன்று நிராகரிக்கப்பட்டதன் பின்பு இடம்பெறும் மேன்முறையீடு முதலில் விசேட நடுவாளர் ஒருவரால் விசாரிக்கப்படும். இவ்விசாரணையில் அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிப்பதோடு மேன்முறையீட்டாளரும் சாட்சியமளித்தல் நன்று. இவ்விசாரணையே அடுத்து இடம்பெறும் விசாரணைகளுக்கு அடிப்படையாக அமைவதால் இவ்விசாரணைக்குப் போகுமுன் மேன்முறையீட்டாளர் தமது வழக்கினை நன்கு தயார்ப்படுத்தி செல்லல்வேண்டும். விசேட நடுவாளரினால் மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்படின் இதன்பின் மூவர் அடங்கிய முறை மன்றுக்கு மேன்முறையீடு செய்யலாம். முறை மன்றின் பின்பு உயர்நீதிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றம் , பிரபுக்கள் சபை என்பனவற்றின் முன்பாகவும் செய்யலாம். ஆனால் இவைகள் முன் போவதற்கு பலமானதும் விவாதிக்கத்தக்கதுமான ஆதாரங்கள் வழக்கில் அமைந்திருத்தல் வேண்டும். அப்படி இல்லாத வழக்குகளை மேன்முறையீட்டிற்கு கொண்டுபோக இயலாதென வழக்குரைஞர்கள் கூறுவர். எனவே தான் ஆரம்பத்திலேயே தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் பலமானதும் விவாதிக்கத்தக்கதுமான ஆதாரங்களை சேர்த்துக்கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


வட இலண்டன் எட்மண்டனில் புதிய ஸ்தாபனம்

**SELLA TRAVEL ESTATES & ENTERPRISE**

SELLA TRAVELS
SELLA SHIPPING
SELLA INSURANCE
SELLA AIR CARGO
LAMINATION
MORTGAGES
INSURANCE
HOUSE LETTING

SELLA

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
பொருட்கள், சிலைகள்
எவர் சில்வர் சுவாமிப் படங்கள்
குத்துவிளக்கு, தாம்பாளங்கள்
பூசைச் சாமான்கள்நடன ஆபரணங்கள்
இமிட்டேசன் நகைகள்,வாத்தியக்கருவிகள்
வேட்டி,சேலை,சாரம்
என்பன மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்

**227 , FORE STREET, EDMONTON,**
**LONDON N18 2TZ**
**TEL : 0181 803 8852**
**FAX : 0181 803 8795**

**NATHAN & CHELVA SOLICITORS**

***YOUR SATISFACTION IS OUR HAPPINESS***

*Contact us for PROMPT and PROPER service in all LEGAL matters*

We have the expertise in the following areas:-

* Criminal & Civil Litigation *Company winding-up & Bankruptcy Matters
* Matrimonial & Injunction Cases * Land Lord & Tenants Matters
* Residential & Commercial Conveyancing * Immigration & Political Asylum
* Licensing - Wills- Probate * Personal Injuries

Legal Aid

* Legal Aid Work*

Partners :- K.Chelva Nayagam LLB ,
T. Sri Pathma Nathan (Former Advocate of Sri lanka)

Legal Aid

**169 TOOTING HIGH STREET, LONDON SW17 0SY**
**TEL: 0181 672 1800 FAX: 0181 672 0105**
**DX : 58873 TOOTING SOUTH**

ALSO BY APPOINTMENT ONLY AT 16, CARLTON TERRACE, UPTON PARK, LONDON E78LH




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சூரியப்பூக்கள்

**-சந்திரா ரவீந்திரன்-**

## முன்கதைச் சுருக்கம்

ரகுபதி தரணா லண்டனில் வாழ்பவர்கள்.தரணாவின் தங்கை சுகிர்தாவும் கணவன் சுகுமாரும் ஈழத்தில் வாழ்கிறார்கள். இவர்களின் அப்பாவும் அம்மாவும் தங்கை வீணாவும் பிறிதொரு கிராமத்தில் வாழ்ந்து வருகிறார்கள்.சுகிர்தாவின் கணவர் குமார் வேலைக்குப்போன இடத்தில் காணாமல் போய்விடுகிறார். சிங்களப் படை சுட்டுக் கொன்றிருக்கலாமென ஊகிக்கப்படுகிறது. இந்தத் துன்பங்களால் மனம் இறுகிப்போன சுகிர்தாவின் தங்கை வீணா தன்னுடைய காதல் அப்பா அம்மா சகோதரர்கள் எல்லோரையும் ஒதுக்கிவிட்டு இயக்கத்தில் சேர்ந்து கொள்கிறாள்....



தரணாவிற்கு மகப்பேற்றுக்காலம் நெருங்கி விட்டிருந்தது! பிறக்கவிருக்கும் குழந்தையின் அதிஷ்டமோ என்னவோ வீட்டில் பல புதிய மாற்றங்கள் திடும்மென்று நிகழவாரம்பித்திருந்தன. ரகுபதிக்கு சற்றே அதிக சம்பளத்துடன் வாகன உதிரிப்பாகங்கள் விற்கும் ஒரு பெரிய நிறுவனத்தில் ஒரு புதிய வேலை கிடைத்திருந்தது. அவனின் அதீத முயற்சியினால் றைவிங் லைசென்சும் எடுத்து ஒரு காரும் வாங்கிவிட்டான். ஞாயிற்றுக்கிழமைகளில் ரகுபதியுடன் காரில் புறப்பட்டு குழந்தைக்கு தேவையான பொருட்களை தரணா வாங்கத் தொடங்கியிருந்தாள். சில சமயங்களில் வார நாட்களில் அனிற்றாவுடனும் நடையாகப் புறப்பட்டு சில பொருட்களை வாங்கி வருகின்றாள். அச்சமயங்களில் எல்லாம் அனிற்றா தன் நண்பன் சசிக்குமாரைப் பற்றி வாய் ஓயாமல் கதைத்துக்கொண்டிருப்பாள்!

சசிக்குமாருடன் அவள் தனியாகக் காரில் உலாப்போகுமளவிற்கு அவர்களது பரிச்சயம் நெருக்கமாகி இருப்பதுதான் தரணாவிற்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தது. சசிக்குமாரது நண்பர்களது வீடுகளிற்கும் கடற்கரை பூங்கா, நீச்சல்பயிற்சி என்று பல இடங்களிற்கும் ஒன்றாகச் சேர்ந்து போகுமளவிற்கு உரிமையுடன் ஐக்கியமாகி இருந்தார்கள். காதலா? என்று தரணா கேட்ட பொழுது நெருங்கிய நட்பு என்று மட்டுமே அனிற்றா சொல்லி வந்தாள். ஆனால் சொற்ப நாட்பழக்கத் திலேயே அவனை மறக்க முடியாத ஒரு மயக்கமான பிரக்ஞையின் நினைவுகளில் அடிக்கடி மூழ்கியிருக்கின்றாள் என்று மட்டும் தரணாவிற்கு நன்றாக விளங்கியது! படிப்பதற்காக மட்டும் வெளியில் செல்வதும் பின் அறைக்குள்ளேயே முடங்கிக்கிடப்பதுமாயிருந்த அனிற்றாவின் அறை இப்போ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எந்நேரமும் பூட்டப்பட்டே கிடந்தது. சமையல் கூட ஒழுங்காக செய்யாமல் வெளியிலேயே அதிக நேரத்தை செலவழிக்கத் தொடங்கியிருந்தாள். !

மார்ச் மாத நடுப்பகுதி இலேசான பனிப்புகாரில் மூழ்கியிருந்த ஒரு வாரநாளின் மதியப் பொழுது அது! யாருமற்ற தனிமையில் பிறந்த மண்ணின் பிறந்த வீட்டின் ,அம்மா அப்பாவின் சகோதரங்களின் நினைவுகளில் மூழ்கியிருந்த வேளையில் என்னவென்று சொல்லத் தெரியாத ஒரு வித வேதனையும் அவஸ்தையும் தரணாவின் உடலை வருத்த ஆரம்பிக்கிறது! நிற்க முடியாமல் இருக்க முடியாமல் படுக்க முடியாமல் நடக்க முடியாமல் அவள் வேதனையில் திணறிக் கொண்டிருந்தபோது தான் அனிற்றா கூட வீட்டில் இல்லாதமை பூதாகரமாய் தெரிகிறது! பிரசவ வேதனை ஆரம்பித்துவிட்டது என்று அவள் உணர்ந்து கொண்டபோது யாருமற்ற தனிமையில் அவளின் முனகல் அவளுக்கு மட்டுமே கேட்டுக் கொண்டிருக்கிறது!

இடுப்பு வலியினால் துடித்துக்கொண்டிருந்தவள் மிகுந்த முயற்சியுடன் போன் அருகில் சென்று ரகுபதியின் வேலைத்தலத்திற்கு டயல் பண்ணுகின்றாள். ரகுபதியை விசாரித்தபோது அவன் நிறுவன விடயமாக நகரத்திற்கு வெளியே தொலைதூரம் போய்விட்டதாகக் கூறுகின்றார்கள். அவளுக்கு மனம் திக் திக் என்று அடித்துக்கொள்கின்றது!

அவர் அருகில் இல்லாமல் இந்த இக்கட்டான நிலயில் நான் என்ன செய்யப்போகிறேன் ? என்று திணறல்.

அவள் அம்புலன்சுக்கு அறிவித்து உதவி கேட்கின்றாள். அவர்கள் உடன் வருவதாகக் கூறிய போதிலும் இனம் புரியாததொரு பயம் மேலும் அவளை ஆக்கிரமித்துக் கொண்டேயிருக்கின்றது! முதல் அனுபவம்! தெரியாத முகங்கள்! இரண்டாம்தரப்பாஷை! .....இவற்றின் மத்தியில் அவளின் பிரசவம் நிகழப்போகின்றதொரு தடுமாற்றம்.!

ஆ.................அம்மா! அடிவயிறு நாராகக் கிழிந்து விடும் போன்ற வலியில் அலறுகின்றாள்.!

அழைப்புமணி ஒலிக்கிறது! கதவு போன் இல் கதைத்துவிட்டு பட்டனை அழுத்திய கணத்தில் அம்புலன்ஸ் முதலுதவியாளர்கள் இருவர் மேலேறி வந்துவிடுகின்றார்கள்.

மிகவும் பக்குவமாக தரணாவுடன் கதைத்தவர்கள் அவளுடைய ' பாக் ஐ ஒருவர் தூக்க அவளது கைபற்றி ஒருவர் அழைத்துச் செல்ல அவளுக்கு தைரியம் மீளுவது போலவும் தோன்றுகின்றது! அம்புலன்ஸ் இல் ஏறும்போது தான் யாரோ!

"தரணா" என்று அவசரமாய் அழைக்கும் குரல் பின்னால் கேட்க, திடுக்குற்றவள் நின்று திரும்பி விழித்துப் பார்க்கின்றாள்.

செந்தூர்ராஜ் ஓடிவந்த வேகத்தில் மூச்சிரைக்க நிற்கின்றான்.

""என்ன தரணா? அம்புலன்ஸ்? ரகுபதி .......ரகுபதி இல்லையா? தனியாவா...?" ஒரே நோட்டத்தில் யாவற்றையும் விளங்கிக்கொண்டவன் போல் தயக்கத்துடன் சேர்ந்த படபடப்புடன் வினாவிவிட்டு உங்களுக்கு ஆட்சேபனையில்லை என்றால் ரகுபதி வரும் வரைக்கும் நான் துணையாக வருகின்றேன்...: என்றவாறே அவளது முகத்தை ஏறிட்டுப் பார்க்கின்றான். தரணாவிற்கு அவனது திடீர் வரவும் அந்நேரம் அவள் மனதில் குவிந்திருந்த தனிமைப் பயத்தைப் விலக்குவது போல் அவனாகவே துணையாக வரவேண்டிக் கொள்வதும் மிகுந்த மனத்தெம்பையும் சந்தோஷத்தையும் ஏற்படுத்தியதோடு கூடவே இனம்புரியாத கூச்ச உணர்வும் அவளுள் அலைமோதிற்று!. இருந்தாலும் மெலிதானதொரு தலையசைப்பில் அவனது வரவை அவள் வேண்டிக் கொள்கின்றாள். செந்தூர் ராஜ் தன்னை அவளது ஒரு சகோதரனாக முதலுதவியாளர்களிடம் அறிமுகப்படுத்திவிட்டு தானும் ஏறி அமர்ந்து கொள்கின்றான்.

வைத்தியசாலையில் பரிசோதிப்பதற்கான படுக்கையறை இவளுக்காகவே தயாராகக் காத்திருந்தது. செந்தூர்ராஜ் அறைவாசலுக்கு வெளியிலேயே தரித்துக்கொள்கின்றான். டாக்டரும் தாதியரும் அவசரம் அவசரமாய் அவளையும் வயிற்றிலிருக்கும் குழந்தையையும் பரிசோதிக்கத் தொடங்குகின்றார்கள்.

பரிசோதிப்பின் முடிவில் டாக்டர் செந்தூர்ராஜ் ஐ உள்ளே அழைக்கின்றார்.

குழந்தையின் தலை இன்னமும் திரும்பவில்லை! ஆனால் இரத்தப்போக்கு அதிகமாகிக் கொண்டிருக்கின்றது.! அதனால் சிசேரியன் பகுதிக்கு அனுப்பப்போகின்றோம். என்றவாறே செந்தூர்ராஜையும் தரணாவையம் மாறிமாறிப் பார்க்கின்றார். பார்வையில் அனுமதிக்கான வேண்டுதல் இருந்தது.

"Sorry' டாக்டர் தரணாவின் கணவர் இன்னும் சில நிமிடங்களில் அநேகமாய் வந்துவிடுவார். அவர் வரும்வரை காத்திருக்கமுடியுமா? அனுபவமற்ற பதற்றத்துடன் கெஞ்சுதலாய் கேட்கின்றான்!"

"Verry Sorry" அப்படியானால் தரணாவின் அனுமதியுடன் மட்டும் நாங்களிதை அவசரமாய் செய்து முடிக்க வேண்டும். இப்பவே நிமிடங்கள் தாமதமாகிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டிருக்கின்றது! இது குழந்தைக்கு நல்லதில்லை. !.........டாக்டர் கூறிவிட்டு சிசேரியன் சந்திரசிகிச்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் தரணாவின் கையெழுத்தைப் பெற்றுக்கொண்டு தாதியர்களுக்கு அவசரமான உத்தரவுகளைப் பிறப்பித்துவிட்டு வேகமாக வெளியேறுகின்றார். டாக்டர் அசல் வெள்ளையனாக பொன்னிற முடியோடும் சிவப்பு அதரங்களோடும் வாட்டசாட்டமாக சாந்தமான பார்வையோடு இருந்தார். அவர் வெளியேறிய ஒரு சில நிமிடங்களில் உள்ளே நுழைந்த இரு தாதியர் ஸ்டெச்சரில் அவளை மாற்றி சந்திரசிகிச்சைப் பிரிவிற்கு அவளைக் கொண்டு செல்கின்றார்கள்.

செந்தூர்ராஜ் செய்வதறியாது திகைத்துப் போய் நிற்கின்றார். என்பது மட்டும் அவளுக்கு விளங்கியது.

"என் கணவர் அருகில் இல்லாமல் பிரசவமா? அதுவும் சந்திரசிகிச்சைப் பிரசவம் ! கடவுளே! இது என்ன சோதனை? அவளுக்கு கண்கள் முட்டிக் கண்ணீர் வழிகின்றது. ! அவள் ஸ்டெச்சரில் இருந்தவாறே திரும்பி செந்தூர்ராஜை பார்க்கின்றாள். அவளின் வேதனையையும் தவிப்பையும் உணர்ந்துகொண்டவன் போல் செந்தூர்ராஜ் பார்வையால் அவளை அமைதிப்படுத்திவிட்டு, நான் உங்கள் வீட்டிற்கு 2,3 தடவைகள் போன் செய்துபார்த்துவிட்டேன். ரகுபதி இன்னும் அங்கு வரவில்லை. போலும்! அநேகமாய் நேராக இங்கேயே வந்துவிடுவார். யோசிக்காமல் பயப்படாமல் சுகமாக குழந்தையோடு வாருங்கள் தரணா... செந்தூர்ராஜ் ஸ்டெச்சரொடு சேர்ந்து நடந்தவாறே வாழ்த்துக்களைக் கூறிவிட்டு சந்திரசிகிச்சைப் பிரிவின் வாசலிலேயே நின்றுவிடுகின்றான்.

வாழ்க்கையில் முதன்முதலாக தரணா அந்த சிகிச்சைப் பிரிவிற்கு வந்திருக்கின்றாள். !பெற்றதாயும் கணவருமே மாறி மாறிக் கண்களிற்குள் வருகின்றார்கள்.! அவளையு மறியாமல் கால்கள் வெடவெடவென நடுங்க வாரம்பித்திருந்தனபயப்படவேண்டாம் தரணா டாக்டரின் இதமான வேண்டுதலோடு தொடைப்பகுதியில் ஏசி ஏற்றப்படுகின்றத தாதியொருவர் ஒட்சிசன் கொடுக்கத் தொடங்கியிருந்தார்.

தரணா உறக்கத்திலிருந்து விழித்தது போல் கண்களைத்

திறந்தபோது கூடவே கண்ணீரும் வழிகிறது! காரணம் புரியாத கண்ணீர்! எப்பொழுதோ கலங்கியிருந்த கண்ணீரின் தொடர்ச்சி போல் தாரைதாரையாக வழிகிறது! யாவும் புகைமண்டலம் போன்ற மங்கலான சூழல் .

உலகத்தில் குதித்துவிட்டு காரணம் தெரியாமல் வீறிட்டழும் குழந்தைகளின் கூச்சல். உடலை சற்றேனும் அசைக்கமுடியாமல் இரும்புக்குண்டாய் கனக்கும் வயிற்றுப்பாகம்! உடலை இரண்டாக்கி விட்டதன் வலியும் எரிவும். இடது கையை அசைக்க முடியாமல் செலையின் ஏற்றப்பட்டிருக்கின்றது! பார்வையின் கலக்கம் மெல்ல மெல்லத் தெளிவாகி சுற்றுச்சூழலை உணரத் தலைப்படும் அந்தப் பொழுதில் தரணா....என்ற மென்மையான அழைப்புக்குரல் காதருகில்! தலையை மெலிதாய் வருடும் முரட்டுக்கைகளின் ஸ்பரிசம்.!

ரகுபதி!.....என் புருஷன்...! என் அத்தான் !...நெஞ்சிற்குள் எழுந்துவரும் நினைவும் மகிழ்வும் அவள் அதரங்கள் நடுங்க தலையை திருப்பிப் பார்க்கின்றாள். ரகுபதி மலர்ந்த முகத்தோடு குழந்தையை மார்போடு அணைத்து ஏந்தி யவாறே அருகில் நிற்கின்றான்.

"தரணா...!தங்கவிக்கிரகம் போல் அழகான ஆண்குழந்தை!ரகுபதி மகிழ்வோடு முணுமுணுத்தவாறே குழந்தையை அவள் அருகில் கிடத்துகின்றான். சில நிமிடங்கள் அமைதியாக இருநத குழந்தை தாயின் ஸ்பரிசம் பட்டதாலோ என்னவோ எதையோ யாசித்து மீண்டும் கால்களை கைகளை அசைத்துவீறிட்டது. அழவாரம்பிக்கின்றான். சின்னச் சின்னப் பூக்களாய் அங்கங்கள். ! அழுகையின் ஆக்ரோஷத்தில் சிவந்து நடுங்கும் உதடுகளும் கண்மடல்களைத் திறந்து பார்க்க அவகாசமின்றி அவசரம் போலவும் அவசியம் போலவும் அழுதுகொண்டேயிருக்கின்றான்.!

ஒன்பது மாதங்களாய் என் உடலோடும் உயிரோடும் பிணைந்து கிடந்தவன் இன்று ஓர் புதிய ஜீவனாய் என் கையில்! நாம் மூவர் என்று ஆகிவிட்ட விசித்திரம்.!

என்ன தரணா? ஓல் ரைற்றா? ரகுபதி ஆசுவாசத்துடன் மெல்லக் குனிந்து கேட்கின்றான்.

"ம்" என்று தலையசைத்தவன் ஏதோ ஞாபகம் வந்தவளாய் அங்குமிங்கும் கண்களைச் சுழலவிடுகின்றாள். கட்டிலருகில் கிடந்த சிறிய ஸ்ரான்டில் சிவப்பு றோஜா மலர்ச்செண்டும் அருகில் ஓர் முயல்பொம்மையும் இவர்களைப் பார்த்தபடி இருக்கிறது.!தரணா கேள்விக்குறியோடு திரும்பி ரகுபதியைப் பார்க்கின்றாள். செந்தூர்ராஜ் தனது இனிய வாழ்த்துக்களை அதிலை இருத்திவிட்டுப் போயிருக்கிறார். ... ரகுபதி புன்னகையோடு கூறியபோது பிரசவத்திற்கு முன்னதான நிகழ்ச்சிகள் ஒரு கணம் அவள் நெஞ்சினுள் ஓடி மறைகின்றத.

www.tamilarangam.net



நான் ஓபிசிற்கு வந்தபோது அவர்கள் என் போன்கோல் வந்தது பற்றி சொன்னார்கள். நான் அவசரமாய் புறப்பட்டு வீட்டிற்குப் போய் செக் பண்ணிவிட்டு இங்கே வந்தேன். உன்னை அப்போ தான் ஒப்பிரேசன் தியேட்டரிற்குள் கொண்டு போயிருப்பதாகச் சொன்னார்கள். வாசலில் செந்தூர்ராஜ் நின்றார். சகலதையும் விபரமாய் சொன்னார். குழந்தை பிறந்த பின்னும் அரை மணி நேரம் உனக்கு மயக்கம் தெளியவில்லை. சொந்தூர்ராஜ் இந்த மலர்ச் செண்டையும் பொம்மையையம் தந்துவிட்டு அவசரமாய் வேலைக்குப் போய்விட்டார். இரவு வேலையாம். ஏற்கனவே 20 நிமிடங்கள் லேற்றாகிவிட்டதென்று ஓடுகின்றார். பாவம் நாங்கள் வெகுவாய் அவருக்குக் கடமைப்பட்டிருக்கின்றோம். ... ரகுபதி கூறியவாறே திரும்பியபோது தாதியர் இருவர் உள்ளே நுழைந்துகொண்டிருந்தார்கள். ரகுபதிக்குத் தம்மை அறிமுகம் செய்த பின் தரணாவின் உடல்நிலை இரத்தஅழுத்தம் யாவற்றையும் பரிசோதித்த பின் ஒருத்தி குழந்தையை புஷஸகொட்டில் போட்டுத் தள்ளிக்கொண்டு வெளியேறுகின்றார். மற்றவள் நேரம் இரவு எட்டு மணிக்கு மேல் என்பதை ஞாபகப்படுத்தி ரகுபதியை வெளியேறுமாறு தயவுடன் வேண்டிக்கொள்கிறாள். ரகுபதி போய்விட்டான்.

மறுநாள் தரணாவின் உடல்நிலை ஓரளவு தேறியிருந்தபோதும் செலைன் அகற்றப்படாமல் குழந்தையை தூக்கமுடியாமல் படுக்கையிலேயே கிடக்கின்றாள்.

பார்வையாளர்களுக்கான நேரம் நெருங்க அவள் ரகுபதியின் வரவை எதிர்பார்த்து வாசலைப் பார்த்து கிடக்கிறாள். கொஸ்பிட்டல் முழுவதும் பரபரப்பான கலகலப்பான ஜனநடமாட்டம். பார்வையாளர்களின் குதூகலமான பேச்சொலிகள். வாசலில் சப்பாத்தொலிகள் கேட்டபோது ஆவலுடன் பார்க்கின்றாள். அனிற்றாவும் சசிக்குமாரும் பின்னால் செந்தூர்ராஜ் உம் வந்து வாசலில் ஒரு கணம் தயங்கிவிட்டு

வாருங்கள் என்றதும் மகிழ்வுடன் உள்ளே நுழைகின்றார்கள். அனிற்றா வெள்ளை றோஜாக்களை தரணாவின் கைகளில் கொடுத்துவிட்டு முத்தமிட்டு அவளை வாழ்த்துகின்றாள். சசிக்குமார் புன்னகை அறிமுகத்தோடு தொட்டிலில் தூங்கிக்கிடக்கும் குழந்தையை ஆராய்ந்து கொண்டிருக்கின்றாள். செந்தூர்ராஜ் உடல்நிலையை விசாரித்தபின் ரகுபதியை காணவில்லையே என்று விசாரிக்கின்றான். தரணாவால் சுயமாக எழுந்திருந்து அவர்களுடன் அளவளாவ முடியவில்லையே என்ற விசனம்.!'

ரகுபதி வந்துவிடுகின்றான். அவர்களின் விஜயம் ரகுபதிக்கு மகிழ்ச்சியை அளிப்பதாயிருந்தது. ஒரு மணி நேரம் கலகலப்பாய் மகிழ்ச்சிப் பரிமாறல்களாய் மறைகிறது. எல்லோரும் விடைபெற்றுக்கொண்டு போகின்றார்கள். சசிக்குமார் அனிற்றாவின் கைகளைத் தொட்டும் தட்டியும் மிகுந்த உரிமையோடு பழகிக் கதைத்துக்கொண்டு போகின்றான். அனிற்றா மனம் நிறைந்த பூரிப்போடு இருப்பதாக அவளின் சிறிய கண்களும் சிரிப்பும் கூறின. அவர்கள் விரைவில் திருமணம் செய்துகொள்ளும் நிலைக்கு வந்துவிடுவார்கள் என்று தரணாவின் உள்ளம் எண்ணிக்கொண்டது.

" தரணா இன்னும் சாப்பிடவில்லையா? முகமெல்லாம் வாடி வதங்கி போயிருக்கின்றது!" ரகுபதி பரிவோடு வினவுகின்றான்.

"இல்லை ரீ கூடக் குடிக்கக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். மூன்று நாட்களுக்கு இதே நிலை தானாம். குழந்தைக்குக் கூட அவர்கள் தான் புட்டிப்பால் கொடுக்கின்றார்கள். தரணாவிற்கு களைப்பில் கொட்டாவி வருகின்றது.

"நீங்கள் வீட்டில் என்ன சாப்பிட்டீர்கள்" .

"ஏதோ சாப்பிட்டேன் தரணா. நீ அங்கு இல்லாமல் எனக்கு வீட்டினுள் நுழையவே ஏதோ போலிருக்கிறது.! ராப்பொழுது முழுவதும் நித்திரையில்லாமல் உழன்று கொண்டிருந்தேன். என் செல்லமகனைக் கூடப் பார்த்துக்கொண்டிருக்க வேணுமே என்ற தவிப்பாயிருந்தது. எப்போ உன்னை வீட்டுக்கு விடுவார்களாம்?" ரகுபதியின் பேச்சில் அயர்ச்சியும் ஆவலும் இருந்தது.

"பத்து நாட்கள் இருக்கவேண்டியிருக்குமென்று நர்ஸ் சொன்னாள். எனக்குக் கூட சகிக்கவில்லை. சொற்ப நிமிடங்களில் பிள்ளையைக் கூட அணைக்கமுடியாமல் கிடக்கின்றேன்........" தரணா சிணுங்கலோடு முனகிவிட்டு

"அதுசரி இன்றைக்கு கடிதமேனும் வந்ததா? என்கிறாள். ரகுபதி ஒரு கணம் விழித்துப் பார்த்துவிட்டு மௌனமாகி பின் ஏதோ சொல்ல முனைவதாய் தோன்ற தரணா எதுவும பேசாமல் அவன் பதிலையே காத்திருந்தாள்.

"சுகிர்தாவிடம் இருந்தும் உன் அம்மாவிடம் இருந்தும் கடிதங்கள் வந்திருக்கு"

"என்னவாம்......?" தரணா ஆவல் பொங்க அவசரமாய் கேட்கிறாள்.

"வீணா போராட்டத்திற்கு போய்விட்டாளாம். ! குமாரின் கைப்பையை கடலிலே மீன்பிடிக்கும் போது ஒருவர் கண்டெடுத்தாராம். !

www.tamilarangam.net



உன் அப்பா மேலும் எழுந்து நடமாட முடியாத நிலைக்கு போய்க்கொண்டி ருக்கின்றாராம். ஊர் நிலைமை மிக மோசமாம். ....! எனக்கு சுகமே குழந்தை பிறக்க வேண்டும் என்று அம்மா ஊர்க் கோயிலில் நேர்த்தி வைத்துள்ளாவாம். அவ்வளவு தான் வேறென்ன சொல்ல..... ரகுபதி மளமளவென்று கூறிவிட்டு நிமிர்ந்து தரணாவைப் பார்க்கின்றான். அவள் கண்ணோரங்களில் இருந்து வழியும் கண்ணீர் தலையணையை நனைத்துக்கொண்டிருந்தது.! "நீ எதுக்கு தரணா அழவேணும் ? நாங்கள் இங்கிருந்து கொண்டு அழுதழுது புரண்டாலும் அவரவர் விதிகளை மாற்றிவிட முடியுமா?..... வீணா கெட்டிக்காரி.:. அவளின் பீரீட்சை முடிய அவளை கஷ்டப்பட்டாயினும் இங்கை கூப்பிட்டு மேற்படிப்புப் படிக்க வைக்கவேணும். அல்லது நல்லதொரு மணவாழ்க்கையை அமைத்துக் கொடுத்து உன் அம்மா அப்பாவிற்கு ஒரு பெரிய சந்தோஷத்தை ஏற்படுத்த வேண்டுமென்று எத்தனை நாட்களாய் மனதினுள் திட்டமிட்டிருந்தேன். உனக்குக் கூட இது திரில் ஆக இருக்க வேண்டுமென்று சொல்லாமலேயே மூடிவைத்திருந்தேன். இனி என்ன செய்வது? யாரை யார் எப்படித் தேற்றுவது.....? ரகுபதி பெருமூச்சோடு மௌனமாகின்றான்.

குழந்தை கை கால்களை உதைத்தவாறே உடலை முறுக்கி தூக்கத்திலிருந்து விடுபட்டு இலேசாய் அழவாரம்பிக்கின்றது.

ம்....மா..ம் மா என்ற பிஞ்சுக்குரல் தரணாவை ஏதோ சொல்ல அவள் கண்களைத் துடைத்து விட்டு குழந்தையையே உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கின்றாள். அதன் அழுகை எவல்லா நினைவுகளிலிருந்தும் அவளை விடுவித்து தன் பக்கம் முழுமையாய் வேகமாய் அவளை இழுத்துக்கொண்டிருக்கின்றது.!

(தொடரும்......)

## ஆசிரியருக்கு!
## சட்டத்தரணிகள் சிறப்பு மலர் பற்றி.........................................

கடந்த அகதி சிறப்பு மலர் பற்றியும் அதில் இடம்பெற்ற ஆக்கங்கள் பற்றியும் ஏராளமான வாசகர்களிடம் இருந்து கருத்துக்கள் கடிதமூலமும் தொலைபேசி மூலமும் நேரடியாகவும் எமக்குக் கிடைத்தன. கருத்துக்களை தெரிவித்த அனைவருக்கும் அகதி நன்றி கூறுகின்றது.

அவற்றில் முக்கியமாக சட்டத்தரணி திரு தவராசா அவர்களினால் அளிக்கப்பட்ட நேர்காணல் பற்றி பலர் தங்களது கருத்துக்களை தெரிவித்திருக்கின்றார்கள்.

அவற்றில் சிலவற்றை இங்கு தருகின்றோம்.

□□சட்டத்தரணிகளை நக்கல் அடித்துக்கொண்டே அவர்களிடம் உதவிக்கு வருகின்றீர்கள்......□□

□□......தனிப்பட்ட ஒருவர் தனது பழியைத் தீர்க்க அகதி சஞ்சிகை பாவிக்கப்பட்டுள்ளது. இது துர்ப்பாக்கிய நிலைமை....□□

□□.......சட்டத்தரணிகள் சிறப்புமலர் என்ற பெயரில் சட்டத்தரணிகள் பற்றியே குறைகள் சொல்லப்பட்டுள்ளது...□□

□□.......திரு தவராசாவின் கருத்துக்களில் எவ்வளவோ உண்மையுண்டு. ஆனால் அவற்றைப் பத்திரிகையில் பிரசுரிக்கும் அளவுக்கு அகதி போய் இருக்கக் கூடாது.....□□

□□......திரு தவராசா தான் ஒரு சட்டத்தரணியாக இருந்தும் சில உண்மைகளை வெளிக்கொண்டு வந்துள்ளார். பராட்டத்தக்கது.....□□

□□....அகதி வளரவேண்டிய ஒரு பத்திரிகை நாக்கத்திற்குரிய விடயங்களைத் தவிர்ப்பது நல்லது......□□

ஆசிரியர் குறிப்பு

கடந்த இதிழில் திரு தவராசாவினால் அளிக்கப்பட்ட நேர்காணலில் குறிப்பிட்ட சில கருத்துக்கள் சில தனிப்பட்டவர்களை புண்படுத்தும் நோக்குடன் தெரிவிக்கப்பட்டதென நாம் கருதவில்லை.

நேர்காணலின் போது அகதியின் சார்பில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதில் அளிக்கும் போது திரு தவராசா அவர்களினால் இக்கருத்துக்கள் தெரிவிக்கப்பட நேர்ந்தது. இக்கருத்துக்களில் ஏதாவது எவரையும் தனிப்பட்ட முறையில் புண்படுத்தியிருந்தால் அதற்காக அகதி தனது வருத்தத்தைத் தெரிவிக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# MARKANDAN & CO

## *SOLICITORS*

*Empowered to Administer Oaths*

TAMIL HOUSE
720, ROMFORD ROAD
MANOR PARK
LONDON E12 6BT

Legal Aid

## M. MARKANDAN LLB

* ALL ASPECT OF IMMIGRATION MATTERS TO APPEALS TO EUROPEAN COURT OF HUMAN RIGHTS.
* ALL TYPES OF CONVEYANCING
* LITIGATION
* ALL COURTS CIVIL/ CRIMINAL
* LANDLORDS/ TENANT MATTERS
* MATRIMONIAL
* POLICE STATION ADVICE
* ALL D.S.S AND HOUSING BENEFIT MATTERS
* FREE ADVICE FOR 15 MINUTES ON THE FIRST ATTENDANCE

### LEGAL AID

WE ARE ALWAYS FRIENDLY, EASY TO TALK AND KEEN TO HELP

**TEL : 0181 514 8188**
**FAX : 0181 514 8303**

www.tamilarangam.net

# WHO? AND WHERE?

## A MINI SOLICITORS' DIRECTORY

ALPERTON

**NATHAN SURESH & CO SOLICITORS**
2nd Floor,
150 A Ealing Road
Alperton - Wembley
Middlesex HAO 4PY
Tel: 0181- 903 -7211
Fax: 0181- 795-4056

BRIXTON

**VETTI & CO SOLICITOR**
400/402 Brixton Road
Brixton
London SW9 7AW
Tel: 0171 274 0100
Fax: 0171 738 465

COLLIERS WOOD

**SOORI SOLICITORS**
44A High Street
Colliers Wood
London SW19 2AB
Tel: 0181 544 9285
Fax: 0181 540 9237

COLINDALE

**PARAM & CO SOLICITORS**
Segaram House
221 Edgeware Road
Colindale
London NW9 OSR
Tel: 0181 200 3500
Fax: 0181 200 1360

COLINDALE

**YOGA & CO SOLICITORS**
47 Booth Road
Colindale
London NW9 5JS
Tel: 0181 205 0899
Fax: 0181 200 5797

EAST HAM

**BALA & ARI SOLICITORS**
416, Barking Road
East Ham
London E6 25A
Tel: 0181 503 5034
Fax: 0181 471 7307

EAST HAM

**MARKANDAN&CO SOLICIOTRS**
Tamil House
720 Romford Road
Manor Park
East Ham
London E12 6BT
Tel: 0181 514 8188
Fax: 0181 514 8303

EAST HAM

**RATNA & CO SOLICITORS**
168A High Street North
East Ham
London E6 2JA
Tel: 0181 470 8818
Fax: 0181 475 0131

ILFORD

**RENGAN N. DEVARAJAN SOLICITORS**
First Floor
128 Ilford Lane
Ilford
Essex IG1 2LE
Tel: 0181 478 5797
Fax: 0181 478 1716

KILBURN

**IVAN KRAMA&CO SOLICITORS**
348A Kilburn High Road
London NW6 2RT
Tel: 0171 624 8814
Fax: 0171 624 8813

SOUTH HARROW

**SHAN & CO SOLICITORS**
31 Wargrave Road
South Harrow
Middlesex HA2 8LL
Tel: 0181 964 5839
Fax: 0181 423 8130

SOUTH HARROW

**THAMPA SOLICITORS**
Zambia House
8A South Hill Avenue
Soth Harrow
Middlsex HA2 0NQ
Tel: 0181 426 8562
Fax: 0181 426 8307



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SOUTH HARROW

**M.K. SRI & CO SOLICITORS**
93 Walton Avenue
South Harrow
Middlesex HA2 8QY
Tel: 0181 423 2141
Fax: 0181 248 3383

SOUTHALL

**KRISH RATNA & CO SOLICITORS**
61A/2 King Street
Southall
Middlesex UB2 4DQ
Tel: 0181 574 6303
Fax: 0181 574 1096

SOUTHALL

**NATHAN (K.P)&CO SOLICITORS**
81 Southall Road
Middlesex UB1 1SQ
Tel: 0181 813 8951
Fax: 0181 843 1123

SOUTHALL

**NATHAN SURESH & CO SOLICITORS**
92A The Broadway
Southall
Middlesex UB1 1QF
Tel: 0181 574 3356
Fax: 0181 571 1610

SURBITON

**SARA & CO SOLICITORS**
112 Raeburn Avenue
Berrylands
Surbiton
Surrey KT5 9EA
Tel: 0181 390 4597
Mob: 0973 183 644

TOOTING

**NATHAN & CHELVA SOLICITORS**
169 Tooting High Street
London SW17 OSY
Tel: 0181 672 1800
Fax: 0181 672 0105

TOOTING

**ARUL & CO SOLICITORS**
21 Rectory Lane
Tooting Broadway
London SW17 9PZ
Tel: 0181 672 8964
Fax: 0181 672 8964

TOOTING

**RAJA & CO SOLICITORS**
295 Balham High Road
Tooting Bec
London SW17 7BA
Tel: 0181 682 2585
Fax: 0181 682 2575

TOTTENHAM

**ANTON WARAN & CO SOLICITORS**
551 High Road
London N17 6SD
Tel: 0181 808 2397
Fax: 0181 801 8818

WALTHAMSTOW

**CHETTY & CO SOLICITORS**
79 Hoe Street
Walthamstow
London E17 4SA
Tel: 0181 521 1313
Fax: 0181 521 1721

WALTHAMSTOW

**BALENDRAN & CO SOLICITORS**
338 Hoe Street
Walthamstow
London E17 9PX
Tel: 0181 503 6311
Fax: 0181 503 7523

WEMBLEY CENTRAL

**SRIKHANTH & CO SOLICITORS**
First Floor
604 High Road
Wembley
Middlesex HA0 2AF
Tel: 0181 795 0648
Fax: 0181 795 0649

**இந்த சிறிய சட்டத்தரணிகள் முகவரிச் சுவட்டில் வெளியிடும்படி அனுமதி அளித்தவர்களின் முகவரிகள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளன.தமிழ் அகதிகளின் வசதிக்காக இச்சுவடு தொடர்ந்து அவ்வப்போது பிரசுரிக்கப்படும்.இப்பக்கத்தில் புதிதாக தங்கள் முகவரிகளை வெளியிடவிரும்புவோர் அல்லது இதில் மாற்றங்களைச் செய்ய விரும்புவோர். அகதிக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.**

# SRIKANTH & CO

SKC **SOLICITORS** SKC

## ADMINISTRATORS OF OATHS

FIRST FLOOR, HIGH ROAD, WEMBLEY, MIDDEX HA0 2AF
(Entrance on Thurlow Gardens)
Tel : 0181- 795 0648 (5Lines) Sri : 0831 195979 (Mobile)

Legal Aid

**LEGAL AID WORK UNDERTAKEN**
Available Late evenings-weekends by prior appointment

**WE UNDERTAKE**

* Civil & Criminal Litigation * Employment Matters*
* Landlord & Tenant Matters * Immigration Matters*
Welfare Benefits & Social Security Matters*
*Conveyancing :- Commercial & Residential*
* Matrimonial Matters & Injunction*
* Traffic Offences * Personal Injury*
*Police Station Representation*

*We have staff who can converse in the following Languages:-*
**Bengali * French * Hindi * Malay * Nepali * Punjabi * Sinhala * Tamil & Urdu*

*we can also arrange interpreters in other foreign languages*

www.tamilarangam.net






உங்களுக்குத் தேவையான
தமிழ், ஆங்கிலசஞ்சிகைகள்
தமிழ், ஹிந்தி, ஆங்கில,வீடியோ, ஓடியோக்கள்
மற்றும் இலங்கையிலிருந்து தருவிக்கப்பட்ட
உணவுப் பண்டங்கள்
உடன் மரக்கறிவகைகள்
ஆகியவற்றை மலிவு விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
கொள்வனவு செய்வதற்கு
நம்பிக்கையோடு அணுகவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

**249-251 Fore Street, Edmonton, London N18**
**Tel : 0181 884 4979 Fax : 0181 345 6317**
25 புது கடை, பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம், இலங்கை